ஞானசம்பந்தம்

மலர் 10.] விக்ருதிஞு மாசிமீ 10—3—51. [இதழ்

சென்னை மூத்தியாலுப்பேட்டை

A. R. C. ஹைஸ்கூல் ஆசிரியர்கள்,

தருமபுர ஆதீனத்திற்கு விஜயம்.

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.
துணை ஆசிரியர் : ச. தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீனம்

தருமபுர ஆதினப் பிரசாரம்

ஆலங்குடி என வழங்கும் திருஇரும்பூளை என்னும் திருத்தலத்தில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு 8—3—51ல் நடைபெற்ற லக்ஷார்ச்சனை பூர்த்திவிழாவை முன்னிட்டு அன்று அவ்வாலயத்துக்கு ஆதீனப் பிரசாரகோஷ்டியார் அனுப்பிவைக்கப்பெற்றனர். மாலை ஆதீன ஓதுவாமூர்த்திகள் திருமுறைப் பாராயணம் செய்தபின்னர், சீகாழி கட்டளைவிசாரணை வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'குருவருள்' என்பதுபற்றியும், திருவாவடுதுறை ஆதீனவித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை 'தேவாரம்' என்பதுபற்றியும், தருமபுர ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர் 'தக்ஷிணாமூர்த்தி' என்பது பற்றியும், ஆதீனக்கல்லூரி வித்துவான் இறுதிநிலை வகுப்பு மாணவர் திரு. ரெ. ராமாநுஜம் 'சமயவளர்ச்சி' என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

மருத்துவக்குடி பஞ்சாங்கம்

எப்படி பலபல பெயர்களுடன், பலபலவிதமாகப் பத்திரிகைகள் மனதை வசீகரிக்கின்றதோ அதுபோலவே பஞ்சாங்கத்திலும் பலவிதம் வந்துவிட்டது. அதில் மக்கள் விழிப்புடன் பார்த்து வாங்க வேண்டும் என்பதற்காகத்தான் "ஒரிஜனல் மருத்துவக்குடி பஞ்சாங்கம் போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்." என்றெல்லாம் மேலட்டையில் பொறிக்கவேண்டியநிலை வந்துவிட்டது. ஆகவே அதைப்பார்த்தாவது மக்கள் ஏமாறமாட்டார்களல்லவா? G. S. V. என்ற ரப்பர்ஸ்டாம்பும் அட்டையிலிருக்கிறதா என்றும் பார்த்துக்கொள்ளவேண்டும். விலை அணா. 6. விலாசம்:- பி. வி. நாதன் அண் கோ, கும்பகோணம்.

உத்தரகாலாமிருதம்

இது மகாகவி காளிதாசர் இயற்றிய வடமொழி நூலின் மொழிபெயர்ப்பு. சிறந்த சோதிட நூல். ஆசிரியரும் தம் தகுதிக்கேற்பச் சிறந்தமுறையில் – எளிய உரைநடையில் அமைத்துள்ளார். சோதிட நூல் கற்கவிரும்புகிறவர்களுக்கு இது ஓர் விளக்கு என்று சொல்லலாம். சிறந்த அறிஞர்களின் முகவுரைகள் அழகுக்கு அழகுசெய்கின்றன. கண்ணையும் கருத்தையும் ஒருங்குகவரும் தெளிவான பதிப்பு. உயர்ந்த காகிதம். சுமார் 120 பக்கங்கள் உள்ளன. ஆசிரியர் உலகோபகாரமாகச் செய்துவரும் பணிகளுள் இந்நூலும் ஒன்று. விலை முதலியன தெரிந்துகொள்ள விரும்புவோர் நூலாசிரியருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். விலாசம்:- சு. ஏ. குமாரசாமி ஆசாரியார், 1 ஏகாம்பரவர்சாரி வீதி, பறங்கிப்பேட்டை.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 10] விக்ருதி௵ மாசி௴ 10—3—51. [இதழ் 4

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

மணம் இல்லா மலரா?

மக்கள் மக்களாவது கல்வியால். அகக்கண் படைப்பதும் அதனால், புறக்கண்களுக்கு உண்மை ஒளி தந்து புண் என்றபெயர் பொருந்தாமல் கண் எனவே மதிக்க வழிவகுப்பதும் அதுவே. அத்தகைய கல்வி உயிருள்ள - ஒளியுள்ள - அழகுள்ள - ஆண்மையுள்ள கல்வியாக ஒளிர வேண்டுமானால் உறுதியான நிலைத்த பொருளை அறிவிப்பதாக அமையவேண்டும். தற்காலத் தேவைகளை மட்டும் நிறைவேற்றிவைப்பது உண்மைக்கல்வியாகாது. சராசரி நாள் ஒன்றுக்கு - ஆள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வருமானம் பெறக்கூடிய நாடும் நிலைத்த இன்பத்தை அடைந்திருப்பதாக அறியக்கூடவில்லை.

திரை மறைவிலே கறைபடிந்த கத்தியை வைத்துக் கொண்டு, உரைமறைவிலே உண்மையை ஒளித்து உலகத்தை அச்சக்கண்ணால் பார்த்துப்பார்த்து அவதிப்

படுகின்றன. மருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய் தானே சரித்திரம் காட்டுகின்ற ஆறுயிரம் ஆண்டுகட்கு அப்பாலிருந்தே ஆண்டவனோடு உறவாடி, அமைதியோடு அளவளாவி ஆனந்தமாக வாழ்ந்துவந்த நமது தாய் நாடு, அரைகணத்தில் அனைத்துலகையும் அழிக்கக் கூடிய ஆயிரக்கணக்கான அணுகுண்டுகளையும் ஜலவாயு அணுக்களையும் தயாரித்து வைத்துக்கொண்டிருந்தும் விஷப்பாம்புபோல பயந்து பயந்து ஓடுகின்ற மற்றை நாடுகளுக்கு அமைதி மருந்தை அள்ளி வழங்கிக்கொண் டிருக்கிறது. அணுச்சக்தியில் ஆண்டவனைக் கண்ட மெய்யறிவை அவைகளுக்கு உணர்த்துகிறது. அணுச் சக்தியில் ஆண்டவனது ஆனந்தக்கூத்தைப் பார்க்கிற போது பரபரக்கின்ற மனமும் அடங்குமே ஒழிய அல்லற்படாது. அணுச்சக்தியால் அழிவைத் தேடுகின்ற மனம் உள்ளமைதியை இழக்கத்தான் செய்யும். வேப்பம் பழத்தை விரும்பும் காகத்திற்கு விளாம்பழம் கொடுத்தால் பிடிக்குமா? பித்தந் தணிய மருந்து இது; சித்தம் தணிக்கும் செயல் இது என்று சொன்னால் தான் தெரியுமா? இதனாலேயே விஞ்ஞானக் கண்காட்சி யில் நமது ஜனாதிபதி ராஜேந்திரபிரஸாத் அவர்கள் விஞ்ஞானம் வேடிக்கை காட்டுவதாக ஆகக்கூடாது உடலுணவாக உயிருணவாக உருக்கொள்ளவேண்டும், இதுதான் உண்மையான விஞ்ஞான அறிவு என்று பேசியது நேயர்கள் நினைவில் இருக்கலாம். இன்றைய இந்திய விஞ்ஞானமோகம் அறிவாளிகளை எங்கே அழிவு சக்தியில் இழுத்துக்கொண்டு போய்விடுமோ என்ற அச்சத்தாலேயே அவர் அவ்வாறு அறிவித்தார்.

இன்றைய விஞ்ஞானமோகம் சமய உணர்ச்சி யில்லாத மொழியறிவையும் கலை அறிவையும் வளர்த்து வருகிறது என்பது உண்மை. இதனால் கலவியின் பயனாகிய களிப்பை- கலந்து பழகும் தன்மையை மக்கள் அடையமுடியாமல் போகிறது. மக்கள் மணமில்லா மலரைச் சூடிக்கொள்ளலாமா?

மெய்கண்டார் விஜயம்

[திரு. மு ஞானப்பிரகாசம், B A., B. SC. யாழ்ப்பாணம்]

கூர்ந்து நோக்குவார்க்கு, எங்கள் சமூகவாழ்வு நிலை தவறி, சீர்குலைந்து, இன்று சின்னாபின்ன முற்றுக கிடக்கின்றது என்பது தெற்றெனப் புலப்படும். பழைய காலத்துக் காட்டுமிராண்டிகளின் ஒரு பரிதாபமான நிலையையோ அல்லது ஆதிகாலத்து ஒரு கேவல நிலையையோ நோக்கிக்கொண்டே எங்கள் சமூகவாழ்வு இன்று போய்க்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில், மேனாட்டாரின் சமூக அமைப்பின் பிரதி ஒன்றை எடுத்து, அப்படியே எங்கள் சமூகத்தை அமைத்து விடலாம் என்று ஆங்கிலம் படித்தவர்கள் நினைத்துக் கொண்டு திரிகிறார்கள். அந்த நினைப்புத் தவறானது.

மேனாட்டாரின் சமூக அமைப்பும், எங்களுடைய சமூக அமைப்பும் சுட்டமண்ணும் ஈரமண்ணும் போல ஒன்றுடன் ஒன்று சேரமாட்டா. மேனாட்டாரின் சமூக அமைப்பிற்குரிய அடிப்படைத்தத்துவம் ஒன்று. எங்கள் சமூக அமைப்பிற்கு உரிய அடிப்படைத் தத்துவம் வேறொன்று. அவர்கள் சமூகத்தைப்பற்றிக்கொண்ட கொள்கை என்றாலென்ன, லட்சியம் என்றாலென்ன ஒருவகையைச் சேர்ந்தது. நாங்கள் சமூகத்தைப் பற்றிக் கொண்ட கொள்கை என்றாலென்ன, லட்சியம் என்றாலென்ன இன்னொரு வகையைச் சேர்ந்தது. அவர்கள் தனிப்பட்ட மனிதனைப்பற்றிக் கொண்டுள்ள கொள்கை ஒரு குறிக்கப்பட்ட எல்லையைத் தாண்டு வதில்லை. நாங்கள் தனிப்பட்ட மனிதனைப்பற்றிக் கொண்டுள்ள கொள்கை 'சிவோகம்' என்னும் வேதாந் தத்தின் உச்சியையும் தாண்டி மேலே செல்லுகின்றது.

இந்த வேறுபாடுகளை நன்கு உணர்ந்து எம் நாட்டுச் சமூகத் தொண்டர்களும் சமயத் தொண்டர்களும் தொட்டதற்கெல்லாம் அவர்களுடைய - அந்த மேனாட்டாருடைய முறைகளைப் பின்பற்றவேண்டும் என்று கருதும் கருத்தை ஒழித்து - எம் நாட்டுச் சமூக வாழ்விற்குரிய அடிப்படை நல்லொழுக்கத்தையும் - கடமை உணர்ச்சியையும் எங்கள் மக்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் போதித்துவருதல் வேண்டும். நாங்கள் மேடைகளில் ஏறி நின்றுசொல்ல எங்கள் தலைவர்களும் எங்கள் மக்களும் திடீரென்று தங்கள் மனப்போக்கை மாற்றி அமைத்துவிடுவார்கள் எனக் கருதக்கூடாது. எல்லாவற்றிற்கும் முன்னர், நாங்களன்றோ - சமூகத் தொண்டர்கள் சமயத்தொண்டர்களாகிய நாங்களன்றோ எங்கள் மனப்போக்கை மாற்றி' அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். பத்திரிகைகளில் பக்கம் பக்கமாய் எழுதியும், மேடைகளில் நின்று மணித்தியாலக்கணக்காய்ச் சொற்பொழிவுகள் பொழிந்தும் வருகின்ற தொண்டர்களாகிய நாங்களன்றோ எங்கள் தகுதியை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

எங்களுக்குள் எத்தனைபேர் இயமம் நியமம் உள்ளவர்கள்? எத்தனைபேர் புலனடக்கம் பெற்றவர்கள்? எத்தனைபேர் புலனடக்கம்பெறப் பாடுபடுபவர்கள்? எத்தனைபேர் மது அருந்ாதவர்கள்? எத்தனைபேர் புலால் உண்ணாதவர்கள்? என்ற இவைபோன்ற கேள்விகளை நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுக்குள் எங்களையே கேட்டுக்கொள்ளுதல் வேண்டும். இயமம் நியமம் இல்லாதவர்களும், புலாலுண்பவர்களும், மது அருந்துபவர்களும், புலனடக்கம் பெறாதவர்களும், மன உறுதி இல்லாதவர்களும் ஆகிய சாதாரண சமூக மனிதர்கள் (Society men) சமய உண்மைகளைப் பிரசாரம் செய்யத் தொடங்கிய காலத்திலேயே எங்கள் சமய வீழ்ச்சி

ஆரம்பமாயிற்று. அக்காலத்திலேயே பொதுஜனங்கள் சமய நம்பிக்கையை இழந்து கோயில்களையும சமயஸ் தாபனங்களையும வேடிக்கைகளையும கேளிக்கைகளையும நிறைந்த நிலையங்களாகக் கருதத்தொடங்கினர். ஆகலின் இனி மேலாயினும் சமயத்தொண்டர்களாகிய நாங்கள் இயமம் நியமம் உள்ளவர்களாய், பஞ்சமா பாதகங்களிலிருந்து விடுபட்டவர்களாய், புலனடக்கம பெற்றவர்களாய், மன உறுதியுடன் சமய உண்மைகளைப் பிரசாரம் செய்யத் தொடங்குதல் வேண்டும. மேனாட்டாரைப் பிரியப்படுத்த வேணடும் என்ற கருத்தோ, மேனாட்டார் நூலகளைப் படித்த மேதாவிகளைப் பிரியப்படுத்த வேண்டும என்ற கருத்தோ எட்டுணையாயினும, எககாரணம பற்றியும் எங்கள் உள்ளத்தில எழுதல கூடாது. சமயத்தொண் டர்களாகிய நாங்கள் புலனடககமே உலகவாழ்விற்கும், சமூக வாழ்விற்கும், தெய்வவாழ்விற்கும் அடிப்படை என்பதை உணர்ந்து உணர்ந்து, ஏனையோர்கரும் அந்த உண்மையை உணர்த்தி வருதல வேண்டும. புலனடக கம் என்பது எளிதில் கைகூடுவதன்று. புலன்களின் இயல்புகளை மாத்திரம் அறிவதனுல அது கைகூடப் போவதில்லை. புலன்களோடு வேறற நின்று தொழிற் படும் மனத்தின் இயல்புகளை உள்ளவாறுணர்வோ மாயின் ஓரளவிலாயினும் 'புலனடககம்' என்பது எமக்குக் கைகூடும்.

'கிராமத்தின் நடுவிடத்திலாதல், நாற்றெருக் கூடுமிடத்தி லாதல் திருமால், சிவபிரான, கணபதி, சூரியன், அம்பிகை ஆகிய இத்தெய்வங்களுக்கு முறையே திருக்கோயில்கள் அமைத்தல் வேண்டும்'

—சக்கிரசீதி

ஐந்தொழில்

[வித்துவான், திரு. க. சம்பந்தனார், கடலூர்.]

5. அருளல்.

ஐந்தாவதாக உள்ளதொழில்தான் அருளல் என்பது. இதுதான் இன்பநிலையாகும். இப்பேரின்பத்தை ஆன்மாக்களுக்கு அளிப்பதுதான் அருளலாகும். அருள் செய்தல் என்றால் வீணையும் நாதமும்போல- பாலும் சுவையும்போல பிரிக்கமுடியாத நிலையில் ஆன்மாக்கள் தன்னிடத்து இரண்டறக் கலந்து நிற்பத் தன்னை (கடவுளை) அளிப்பதாகும். உயிர்கள் தத்தம் அறிவு நிலைக்கேற்ப முயற்சிசெய்து செய்து, நன்னெறிநின்று, சிறிது சிறிதாக மலங்களினின்றும் நீங்கி, ஆண்டவனை அடைந்து அவனைப்பெற்று அந்நிலையில் கிடைக்கும் அந்தமில்லா ஆனந்தத்தை அனுபவித்து நிற்கும் நிலைதான் மோக்ஷநிலை எனப்படும். இதனை மணிவாசகர் கடவுளைப்பார்த்து மிகச் சாதுரியமாக "தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னைச் சங்கரா ஆர் கொலோ சதுரர்? அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன் யாது நீ பெற்றதொன்றென்பால்?" எனக்கூறியுள்ளார்.

அருள் தருதல் ஆண்டவன் இயல்பு. இவ்வியல்பு ஒவ்வொரு மதத்திலும் கூறப்பட்டுள்ளது. ஆனால் வழிவகை வேறாக இருக்கும். எனினும், அதன் உயர்வு எம்மதத்திலும் கையாளப்பட்டு வருவதாலேயே நாம் அறியலாம். துன்பகடலில் மூழ்கியுள்ள உயிர்களனைத்தையும் ஆண்டவன் கருணைப்பெருக்கினால் அத்துன்ப நிலையினின்றும் நீக்கி அருள்செய்கின்றான். அறிவிற்

குறைந்த உயிர்கள் பிழைசெய்தல் இயல்பு. ஆனால் பேரறிவாளன் அதனைப் பொறுத்தல் மிகச்சிறந்தது அல்லவா! பொறுத்தல் பின் அருள்செய்தல் என்பதில்லா விட்டால் தலைவன் தலைவனாகான். அறியாமையாற் பிழைசெய்த விடத்துந் தலைவன் இதனைப் பொறுத்திடு வான் என்ற துணிவுகொண்டு உயிர்கள் பயந்து நிற்க லாம். அதனைப் பொறுத்தல், பின் அருள்புரிதல் என் பது ஆண்டவன் கடன் என்பதைப் பலரும் 'பிழைத் தால் பொறுககவேண்டாவோ' எனவும் 'பிழை உளன பொறுத்திடுவீர் என்றடியேன் பிழைத்தககால் பழி யதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்' எனவும் கூறியுள்ளனர். ஆகவே சைவமதமே பிழை யைப் பொறுத்தல் பின் அருள்புரிதல் என்ற இரு உண்மைத்தத்துவத்தை அடிப்படையாகக கொண்டது எனக் கூறலாம். கிறிஸ்துவ மதத்திலுங் கூடப் பாவ மன்னிப்பு என்பது கூறப்பட்டுள்ளது. அங்ஙனம் ஆண்டவனால் மன்னிக்கப்பட்டு அவனருளுககு இலக் கான ஆன்மாக்கள், அவனருளாலே அவன்தாள் வணங்கி, தாடலை என்ற சிறப்புச் சொல்லைப்போல் பிரியாநிலை கூடிநிற்கின்றன.

தாடலை என்ற சொல்லைப் பிரித்தால் தாள் தலை எனவாகும். ஒருசொல் பிரித்தாலும் சிறந்தபொருள் தந்தும், பிரிக்காவிடத்தும ஒருசொலபோலவே நின்று சிறந்தபொருளைத் தந்தும் நிற்பதைப் பார்ககுமிடத்து இச்சொல் மிகமிகச் சிறந்தசொல் என்று தெரிகிறது. இவ்விரு சொற்களும் கூடினபோது, ஒரு சொல் போலவே தோற்றுகிறது. இதுபோலவே ஆன்மாவும் கடவுளும் பிரியாநிலையில கூடிநிற்கவேண்டும். இதற் குத்தான் அவனருள் வேண்டும். அவனருளின்றேல் அவன்தாளைக கூடமுடியாது; வணங்கவும் முடியாது. அவனருள் கிட்டியபோதே ஆன்மாக்கள் அவன்

திருவடியைச் சேர்கின்றன. இங்கு ஒரு விசேடம்; அதாவது. நடராஜர் உருவில் உள்ள தூக்கிய திருவடி யானது சிறிது வளைந்து காணப்படுகிறது. உள்ளங்கால் பள்ளமாகவும் இருக்கிறது. அப்பாதமே துணையென நம்பிச்செல்லும் அன்பர்கள் தலையானது சிறிது மேடாகவும் காணப்படுகிறது. இவர்கள் தலையில் ஆண்டவனது தூக்கிய பாதம் பொருந்தும்படி நிற்பார்களானால் அது எவ்வளவு அழகாயிருக்கும். அந்நிலைதான் தாள் தலையின் ஒன்ருக ஆனவுடன் தாடலை என்ற சொல் லைப்போல ஒருவடிவமாகவே காணப்படும். அப்பொழுது பதிவேறு, பசுவேறு எனப்பிரித்துப் பார்க்கமுடியாது. சோதியோடு சோதி கலந்தாற்போலப் பிரியாநிலை ஏற் பட்டுவிடும். இதனைத்தான் திருவருட்பயன் என்ற நூலார் "தாடலைபோல் கூடியவை தரணிகழா வேற் றின்பக் கூடலை நீ யேகமெனக் கொள்" எனக்கூறி யுள்ளார். ஆகவே ஆண்டவன் அருளல் என்ற தொழி லைத் தூக்கிய திருவ்டியால் புரிந்தருளுகிருன். இந்த ஐந்தொழிலையும் மூத்தொழிலிலேயே அடக்கித் தொழில் மூன்றெனவும் கூறலாம். மறைத்தல் என்ற தொழிலை அழித்தல் என்ற தொழிலிலும், அருளல் என்ற தொழிலை காத்தல் என்ற தொழிலிலும் அடக்கி இறைவன் ஆக்கல் அளித்தல் அழித்தல் என்ற மூத்தொழில் புரிகிருன் என்றும் கூறுவதுண்டு. விரிந்த நிலையில் காணப் படுவதாய இந்த ஐந்தொழிலும் நடராஜ மூர்த்தியினுல் தான் நடைபெறுகிறது என்ற உண்மை உண்மைவிளக் கம் என்ற சாத்திர நூலில் வந்த ஒருபாடலால் நாம் அறியலாம். அது வருமாறு:-

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

அன்றியும் குமரகுருபர சுவாமிகள் இறைவன் ஐந்தொழிலாற்றும் முறையினை அழகுபடச் சிதம்பர மும்மணிக்கோவையில்,

"பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும
நாமநீர் வரைப்பின் நானில வளாகமும
ஏனைப் புவனமும் எண்ணீங் குயிருமு
தானே வகுத்தது உன் தமருகக் கரமே;
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையும காப்பது உன அமைத்த பொற்கரமே;
தோற்றுபு நின்றஅத் தொல்லு லகடங்கலும்
மாற்றுவ தாமல் வைத்ததோர் கரமே;
ஈட்டிய வினைப்பயன் எவற்றையும மறைத்துநின்று
ஊட்டுவதாகும நின் ஊன்றிய பதமே;
அடுத்தஇன் னுயிர்கட்கு அளவில்பே ரின்பம்
கொடுப்பது முதல்வ! நின் குஞ்சித பதமே;
இத்தொழி லைந்துநின் மெய்த்தொழி லாகப
பால் உண்குழவி பசுங்குடர் பொறாதென
நோய்உண மருந்து தாய் உண்டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக்கு இன்னருள் கிடைப்ப
வையம ஈன்று அளித்த தெய்வக்கற்பின்
அருள் சூல் கொண்ட ஐயரித் தடங்கண்
திருமாண் சாயல் திருநிறை காணச
சிற்சபை பொலியத் திருநடம புரியும
அற்புதக் கூத்த".

எனக் கூறியருளியிருப்பதும் காணத்தக்கது.

(வரும்)

கந்தரநுபூதி.

தருமையாதீனப்புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஆரணி

ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய நூல்கள் பலவற்றுள்ளும் பெருஞ் சிறப்புவாய்ந்த சிறு பிரபந்தம் இக் கந்தரநுபூதி. இதனினுஞ் சிறியன வேல்விருத்தம், மயில விருத்தம் என்பன. கந்தரநுபூதி சிறந்தது என்றதால் ஏனையவை சிறவாதவை என்று கொள்ளல் இயலாது. அநுபூதிக்கு முன்னவை அதனினுஞ் சிறந்தனவாதலில்லை என்பதே கருத்து.

கந்தரநுபூதிச் செய்யுட்கள் சிந்தடி (முச்சீரடி) யாலானவை. அளவடியாலானவை எனக் கொண்டு நாற்சீராகப் பிரித்து வெளியிடுதல் பொருந்தாது.

'நெஞ்சக்கன கல்லும் நெகிழ்ந்துருக'
'பேசாவநு பூதி பிறந்ததுவே'

என முச்சீராகப் பிரித்தல் வேண்டும்.

'நெஞ்சக கனகல் லுநெகிழ்ந் துருக'
'பேசா வநுபூ திபிறந் ததுவே'

எனப்பிரிப்பது எல்லா வகையினும் பிழைபாடுடையது. சில அடிகளில் மோனைத் தொடையமைப்பு இல்லை. பொருட்போக்கை நோக்கிச் சென்றதால் அது நேர்ந்தது. பல அடிகளில் மோனை யமைந்துள்ளமைகாணலாம்.

'செஞ்சொற்புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனை பதம்பணிவாம்.'

என்பதிலுள்ள மோனை சிந்தடிக்கேற்றது.

'தஞ்சத்தருள் சண்முக னுக்கியல்சேர்'

என்றதில் இரண்டாவது சீரில் மோனையுள்ளது.

'ஆடும்பரி வேல்அணி சேவலெனப்
பாடும்பணி யேபணி யாவருள்வாய்'

என்பவற்றுள் அமைந்த மோனையையும், 'உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்' (கம்பர்) என்பதில் அமைந்த மோனையையும் ஒத்திட்டு உணர்தல் நன்று. இவற்றிற்கு இலககணம் இடந்தருதல் இன்றியமையாதது.

'சாடுந்தனி யானை சகோதரனே'

என்று பிரிககத்தக்கதை

'சாடும் தனியா னைசகோ தரனே'

என்று பிரிப்பது அப்பாட்டைக கொல்லுதல் போல்வதே.

1. 'எல்லாமற என்னை இழநதநலம' எனவும,
'சகமாயையுள் நின்று தயங்குவதே' எனவும,
2. 'நிட்டுர நிராகுல நிர்ப்பயனே' எனவும்,
'போர்வேல புரந்தர பூபதியே' எனவும்,
3. 'யானாகிய என்னை விழுஙகிவெறுந்
தானாய்நிலை நின்றது தற்பரமே' எனவும்,
4. 'வேதாகம ஞான விநோதமனோ
தீதாசுர லோக சிகாமணியே' எனவும்,

வரும் அடிகளுள் 1 - 4 ஆம் எண்ணுள்ளவை தேமாங் கனி தேமா கருவிளங்காய் என்னுஞ்சீரின.

2 ஆம் எண்ணுள்ளவை தேமாங்காய் கருவிளம் கூவிளங்காய் என்னுஞ்சீரின. அவற்றில் முதற்சீர்

காயீற்றதாதலின் நேர் முதற்றாயும், கடைச்சீர் நேர் முதற்றாதலின் விளவீற்றதாயும அமைந்திருத்தல் அறியத்தககது. இஃது யாப்பறிபுலவர்கரு எளிதிற் புலனும. முதல் ஈரெணணுடைய இருவேறு பகுதியிலும் நான்காவதுபகுதியிலும இடைச்சீர்களின்ஈரசைகளையும் நோககுதல் வேண்டும். அந்நோககத்தால் உணரப்படும் அமைதியை 3-ஆம் எண்ணுடைய பகுதியில ஒருஙகே காணலாம. ஆகவே முதற்சீர் மாங்காய்ச் சீராயேனும் மாங்கனிசசீராயேனும நிற்கும். இடைச்சீர் மாச்சீராயேனும விளச்சீராயேனும் நிற்கும. கடைச்சீர் விளங்காய்ச்சீராயே நிற்கும் என்பது பெற்றும். அஃதாவது,

1	2	3
மாங்கனி	தேமா, கூவிளம்	விளங்காய்
மாங்காய்	கருவிளம	விளங்காய்.

என்றமையுஞ் சீர்களாயே நிற்கும் என்றவாறு. இடைச்சீர் புளிமாச்சீராக யாண்டும் நிலலாது. முதற்சீீற்றில் காயோ கனியோ நிறறலின, இடைச்சீர் நிரை முதலாக வாராது. அதனுல புளிமாசசீர் இவ்வகைச செய்யுளில் அமையாது. இவ்வுண்மையை யுணர்வோர்கரு,

'தட்டுடற வேல்சயி லத்தெறியும' (9)
'வடிவுந்தன முமமன முங்குணமும' (19)
'ஒவ்வாத தெனுவுணர் வித்ததுதான்' (30)

என்று இருத்தல வேண்டுமென்பதும் அவை இப்போதுள்ளவாறு இருப்பது பிழையுடைத்தென்பதும் நன்கு புலனும சமாஜப்பதிப்பில நாற்சீராகப்பிரித்தபோதும் முன்னிரண்டும பிழைபட்டில. (திருப்புகழ வெளியீடு பார்கக). கழகப்பதிப்பில் (முருகன்புகழமாலையையும்) பார்கக.

'சிந்தடி நான்காய் வருவது வஞ்சிய (து)
எஞ்சா விருத்தம என்மனார் புலவர்.'

(யாப்பருங்கலம 92) எனறதால் வஞ்சிப்பாவினத்துள் விருத்தத்தின்பாற்படும் இவ்வகைச் செய்யுளை, மூச்சீரடியாக்கொள்ளாது நாற்சீரடியாகக கொண்டு பிரித்துப் பதிப்பித்தல் நன்றன்று இன்னுங்காண்டல உறுதி பயககும.

'கொலையேபுரி வேடர் குலப்பிடிதோய்
மலையேமலை கூறிடு வாகையனே.'

என்னும் இயல்பாய முறையை மாற்றி,

'கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா கையனே'

எனக கொலையேபுரிதல் புலமைககுரித்தோ?

இத்தகைய நிலை 'உருவாய் அருவாய்' எனத் தொடங்கும பாட்டிற்கு நேர்தலால பாமபன் சுவாமிகள் 'பேசாவநுபூதி பிறந்ததுவே' என்பது வரையே ஸ்ரீ அருணகிரிநாதர்வாககு என்று ஒருபதிப்பும அவ்வாறு வெளியிடச செய்தருளினார்கள். இமமாற்றம் ஆசிரியர் 'தாமே பெற வேலவர் தந்ததனால் ஆனதன்று'; நாமே னடத்திய கவையாலானது தமிழப்பாடல தமிழ்நாட்டில் இககேட்டைத் தலைநோககின் என்னே விதியின்பயன் என்னது யாது செய்வது? இங்கு இச்செய்யுள் சிந்தடியெனக் கூறும அடியேன் ஆதாரமிலேன் அல்லேன். பொய்யில் புலவர் எலலோரும மெய்யே யெனப் புகன்று உவப்பர். அடியேன் அறிந்த அவ்வாறறிவார் அறிகின்ற தனில் எவ்வாறு ஒருவர்கக இசைவிப்பது? யாப்பியல் உணர்ந்தாரும் என்னை நோக்கிச் 'சும்மா இரு சொல்லற என்றலும்' கூறும. அவர் விடாப்பிடி போகாவகைமெய்ப்

பொருள் பேசியவாருகப் பின்வரும் மேற்கோள்களை அளவடியாகப் பிரித்துச்சொல்லி யின்புறும் வண்ணம் வேண்டுகின்றேன்.

'அக்கங்கை சுமந்தருள் பெற்றதுகேட்
டுக்கண்விசும போரிரு கங்கையுமுன்
புக்குத்தொழு கின்றது போலுமெனத்
தொக்குத்திவள் சாமரை துள்ளினவே'

என்னுந் தணிகைப்புராணச் செய்யுள் (சிபரிபூரண நாமப்படலம் 41)

'காலாதியின் வன்பகை காய்ந்துசமர்
ஏலாமை தமககருள் ஈசனமகன்
கோலாதியி னுடல் குறித்தமைதேர்ந்
தாலாநட மாடின பாரிடமே.'

(ஷை 44) இரண்டொடும்,

'சிந்தா மணியே தெய்வத் தருவே..........
நந்தா வொளியே நறையே அமுதே'

(வள்ளிநாயகி திருமணப்படலம் 154) என்பதனை ஒத்திட்டு முச்சீரடிக்கும நாற்சீரடிக்கும் உள்ள வேறுபா டுணர்தல் நன்று.

வரும்புண்டாம வாளியின் மார்புருவிப்
பெரும்புணடிற வாவகை பேருதிநீ
இரும்புண்டநீர் மீள்கினும் என்னுழையிற்
கரும்புண்டசொல் மீள்கிலள் காணுதியால்.

என்ற கம்பர்பாடலும் அளவடிப்பாடலன்று; சிந்தடிப் பாடலே. இக்கருத்தில் அடியேனும் மீள்கிலேன். அறிஞர் இன்னும ஆராய்ந்து உண்மை யுணர்த்தின் மீள்வேன்.

ஞாயிற்றினுட் புள்ளிகள் - (Sunspots)

[சிவக்கவிமணி, திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், கோவை]

சூரியமண்டலத்தினுள்ளே சில புள்ளிகள் காணப் படுவதாக இப்போது நவீனமாக ஆராய்ச்சிசெய்யும் வானசாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவை இந்த உலக அண்டத்தையும் அதனில் வாழ் உயிர் களையும் பாதிக்கின்றன என்றும் கூறுகின்றார்கள். இந்தப் புள்ளிகளின் தன்மையும் நிலையும்பற்றி இன்னும் போதிய விவரங்கள் தெரியவில்லை, மிகக் கொடிய தழற் பிண்டமாகிய சூரியப்பிழம்பிலே அவை எவ்வாறுளவாயின? அவை எதனால் ஆக்கப்பட்டவை? என்பனவாதி வினாக்களுக்கு விடை இனித்தான் பெற வேண்டியிருக்கிறது. ஆனால் அவற்றைப்பற்றித் தெரிந்த சில கருத்துக்களே இங்குப் பேசப்படுகின்றன.

சூரியன் மேருவைச் சுற்றிவருகின்றது என்றும், அதற்கு ஒரு வானவீதியுள்ளதென்றும் நமது சாத்திரங் கள் பேசுகின்றன. கடிய நெருப்புப் பரமாணுக்கள் அனேககோடி கூடிச் சேர்ந்த பிழம்புதான் நமக்கு ஒரு சூரிய அண்டமாகத் தெரிகிறது என்பது வான்சாத் திரிகள் கண்ட துணிபு. அனேககோடி நாழிகை தூரத் தில்உள்ள நமது பூமியிலும் அதன் வெப்பம்வந்து கொடி தாய்த் தாக்குகின்றதென்றால் அவ் வெப்பத்தின் அளவு நம்மால் கணிக்கமுடியுமோ? சூரிய புத்திரர்களாகிய ஜடாயு சம்பாதி என்னும் கழுகரசர்களிருவரும் சூரிய மண்டலத்துக்குச் செல்லும் நோக்கத்துடன் மேலே பறந்தார்கள் என்றும், ஒரு பகுதிவழியில் சூரியவெப்பம் தாக்கியதனாலே சிறகுகள் கருகித் தீந்து வலியற்று நிலத்தில் வீழ்ந்தார்கள் என்றும், பின்னர்ச் சிறிது உணர்ச்சிபெற்றுத் திருப்புள்ளிருக்கு வேளூர் என்னும்

வைத்தீசுவரன் கோயிலில் இறைவரை வழிபட்டுச் சிறகுகள் வளரப்பெற்று நலம்பெற்றார்கள் என்றும் புராணவரலாறு கூறுகின்றது. அவர்கள் பூசித்த செய்தி திருஞானசம்பந்த நாயனார் தேவாரத்திலும் காணப்படும்.

சூரியன் மிகப் பெரிய அண்டம. அதைச் சுற்றிச் சுற்றிச் சந்திரன் முதலிய பல அண்டகோள்கள் வலம் வருகின்றன; சூரியன் தன்னிடத்திலே நிற்கின்றான் என்றும், பூமியைச்சுற்றி வருகின்றான் என்பது புராண கதை என்றும இன்னும பலவாறும இதுவரை நமபப் பட்டு வந்தது. சூரியனும சுற்றுகின்றான் என்னும் கொள்கை ஏளனததுககு இடமாகியும் வந்தது.

ஆனால் சூரியனும தன் இருககும் இடத்தில் ஒரே பிடியாய் நிலலாது செலகின்றான் என்பது சமீபகாலத் தில கணடுபிடிககப்பட்ட மேற்கூறிய சூரியப்புள்ளி களால் மேனாட்டு வானசாத்திரிகளால் துணியப்பட்டது. இந்தப் புள்ளிகள் ஒரே இடததில் நில்லாது இடம் மாறி மாறிச் செலவதாகக காணப்படுகின்ற நிலையினால் அவர்கள் அவ்வாறு துணியலாயினர். கிரகங்களுக் கெல்லாம் உருளுதலும செல்லுதலும், அதாவது உருண்டுகொண்டவாறே செல்லுதல் என்னும் இரு வகைச் செலவு (அங்கப்பிரதட்சணம் செய்தால்போல) உண்டு என்பதை நமது முன்னோர்கள உணர்ந்திருந் தார்கள், "சென்று உருளும் கதிரிரண்டும் விசும்பில் வைத்தார்" (திருநல்லூர் திருப்பதிகம் 9) என்பது நமது பரமாசாரியராகிய திருநாவுககரசு நாயனார் திருவாக்கு. எனவே சந்திரனைப்போலவே சூரியனுககுச் செல்லுதல் உருளுதல் என்ற இரு செலவும உண்டு என்பதாம்.

மேனாட்டு வானசாத்திரிகள் இப்போது தான் கண்டு பிடித்த சூரியப்புள்ளிகளைப் பற்றியும் நமது பெரியோர் முன்னரே உணர்ந்திருந்தார்கள்.

"துடிகொள் நேரிடையாள் துணைமுலைக் கண்கள் தோய் சுவடு, பொடிகொள் வான்தழலில் புள்ளிபோல் இரண்டு பொங்கொளி தங்கு மார்பினனே" என்ற திருவாசகத் திருவாக்கு (அருட்பத்து 5) இதனை எடுத்துக் காட்டுவதாம். இதில் பொடிகொள் வான்தழல் என்பது சூரியன். கோடி கோடி தீ அணுத்திரளின் கூட்டமாகிய பிழம்பே சூரியமண்டலமாம என்பது விஞ்ஞானிகளின் கூற்றுமாம். வாஞ் என்பது வானவீதி. ஆகாயம; தழல் தழற்பிழம்பு; தழலில்புள்ளி முனகூறிய சூரியனிற் புள்ளி. (Sunspots) மேலே, செல்லுதல் என்பது கிரகங் கள் தன்னினமிககபெரியதோர் அண்டத்தைச சுற்றிச் செல்லுதலையும, உருளுதல எனபது அவ்வாறு செல்லும் போதே தனனைததான சுறறிச சுழலுதலையும் குறிப்பன: ஆதலின் "கதிா இரண்டும்' என்றதனுல் சூரியனுககும் இந்த இரண்டு கதிகளும உண்டு என்பது போதரும.

புலியும் - சிங்கமும்

புலி:- பூனையை ஒத்தவடிவினது, பொன்மை நிறத் தினையும, கரிய புளளிகளையும பெரியஉடலினையும் உடையது. பிடரியில் மயிர் இல்லாதது.

சிங்கம்.- சிறிய இடையினையும பெரிய வடிவையும் உடையது. புருவங்கள் அகன்றிருக்கும. கன்னமும அப்படி. நீண்ட கண்கள்; பிடரிமயிர்; கொஞ்சமவெளுப்பான நிறம; மிக்கவன்மை; இவைகளையுடையதோடு கரிய புளளிகள் இல்லாமல் இருபபது.

—சுக்கிரநீதி

துருத்தீஸ்வரம் கோயில் கல்வெட்டு

வித்துவான், ஸ்ரீமதி S. கரும்படுசொல்லி அம்மையார்.

முன்னுரை:— குற்றாலம் என்னும் மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டமையால், அம்மரத்தின் பெயரால் இவ்வூர் வழங்கப் பெறுகிறது. குற்றாலம் என்பதை ஒருவகை ஆத்திமரம் என்று காலஞ்சென்ற திரு. மகா மகோபாத்தியாயர். டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர்கள் "மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம்"—என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இது நால்வர்களாலும் பாடப்பெற்ற பழைமையும் பெருமையும் வாய்ந்த பதியாகும். இதன் பழம் பெயர் துருத்தி என்பது ஆகும். துருத்தி என்பதற்கு ஆற்றிடைக்குறை என்று அடியார்க்கு நல்லார் உரை கூறியுள்ளனர். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்த ஞானசம்பந்தர் இது காவிரியின் நடுவில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். சுமார் கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இது தென்கரைக்கோயில் ஆயிற்று. தென்கரை என்பது காவிரிக்குத் தென்கரை ஆகும்.

இக் கோயிலைக் கற்றளியால் எடுப்பித்தவர் திருவிசைப்பாப் பாடிய கண்டராதித்த சோழ தேவரது அருமை மனைவியாராகிய செம்பியன்மாதேவியார் ஆவர். இவ்வம்மையாரது புகழுக்கு நிலைக்களமாய் விளங்கும் இக் கோயில் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்தது ஆகும்.

இது பொழுது ஆதீனத்தில் இருபத்தைந்தாம் பட்டத்தில் வீற்றிருந்தருளுகின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் கோயிலைப் பழங்காலத்துச் சோழ மன்னர்களைப்போலப் புரந்து வருகின்றார்கள். இவர்

களின் அருட்பெருக்கால் இவ்வாண்டுக் கலைமகள் விழா அன்று இக் கோயிலில் எனக்கும் என் அரும் பெறல் தந்தையார்க்கும் விரிவுரைகள் இருந்தன. அன்று மாலை கோயிலை வலம் வந்த யான் இக் கோயில் கல்வெட்டுக்களில் ஒன்றைப் படித்து எழுதினேன்.

கல்வெட்டைப் பற்றிய குறிப்பு:— இருக்கும் இடம்: அர்த்தமண்டபத்தின் தென்புறச் சுவர். குறிப்பிடப் பெற்ற அரசன்: முதலாம் இராச ராச சோழன். [கி. பி. 985 to 1014] இக் கல்வெட்டுத் தோன்றிய காலம்: கி. பி. 985-17-1002. எனவே இற்றைக்கு 942 ஆண்டுகட்கு முற்பட்டது.

அரசனைப்பற்றிய குறிப்பு: தஞ்சைப் பெரிய கோயிலை எடுப்பித்தவன் இம் மன்னனேயாவன். இவனது மனைவியாராகிய ஒலோகமாதேவியார்தான் திருவை யாற்றில் வடகயிலாயம் என்று வழங்கப்பெறும் ஒலோக மாதேவீச்சரத்தை எடுப்பித்தவர். தருமபுரம் மகா சந்நிதானம் அவர்கள் இக்காலம் இக்கோயிலைப் பழுது பார்த்து வருகின்றார்கள். இது அவர்களுடைய அருஞ்செயல்களும் ஒன்றாகும். இவ் வம்மையாரால் எடுப்பிக்கப்பெற்ற சிவன்கோயில் தமிழ்நாட்டில் இஃது ஒன்றேயாகும். இதனைப் போற்றிப் புரந்தருதல் தமது முதற்கடமை என்று உணர்ந்த மகாசந்நிதானத்திற்குத் தமிழ் நாட்டார் பெரிதும் கடமைப்பட்டவர் ஆவர். இத் திருவையாற்றில் தென்கயிலைக் கோயிலை எடுப்பித்தவர் இந்த இராசராச சோழனது மருமகள் ஆவர்.

தியாகராசய்யர் திருவிழாவில் நமது உள்நாட்டு மந்திரி. கனம். சி. இராசகோபாலச்சாரியார் அவர்கள் The Brain of the Congress. கலந்துகொள்ள எழுந் தருளும் இந்நாளில் இவ்வூர்க்குத் தொடர்புடைய சோழ மன்னனது கல்வெட்டு இக் கண்காட்சிச் சாலையில் இருப்பதும் பொருத்தமாகும் என்று வைக்கலானேன்.

*கல்வெட்டின் மூலம்:- ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச்செல்வியும் தனக்கே யுரிமைபூண்டமை மனக் கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி வேங்கை நாடும் கங்கபாடியும் நுளம்பபாடியும் குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும் முரட்டெழில் சிங்களர் ஈழ மண்டலமும் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட ஸ்ரீகோவி ராஜ ராஜ கேஸரி பன்மற்குயாண்டு 17-வது தென்கரை உய்யக்கொண்டார் வளநாட்டுத் திருவழுந் தூர் நாட்டுத் தேவதானம் வீங்குநீர்த் துருத்தி சொன்ன வாரறிவார் ஆடுகின்ற பொற் பலகை விடங்கருக்கு நாங்கூருடையார் அமரந் பல்லவய்யந் திரு நொந்தா விளக்கு ஒன்றினுக்குவைத்த ஆடு தொண்ணூற்றாறு.

விளக்கம்: இக்கல்வெட்டில் முதல் பத்து வரிகள் முதலாம் இராசராசனைப் பற்றிய மெய்க்கீர்த்தியாகும். அது ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. அதனால் அவன் காந்தளூர்ச் சாலையில் உள்ள மரக்கலங்களை அழித்தான் என்றும், வேங்கைநாடு கங்கபாடி, குடமலை நாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம், (இலங்கை) இவைகளை வென்றான் என்றும் அறிகின்றோம். எஞ்சிய பகுதி அவ்வரசன் அரியணை ஏறிய 17ஆம் ஆண்டில் வீங்கு நீர்த்துருத்தி சொன்னவாறு அறிவார் ஆடுகின்ற பொற்பலகை விடங்கருக்கு நாங்கூரில் இருந்த அமரன் பல்லவரையன் ஒரு நுாண்டாவிளக்குக்கு 96 ஆடு கள் கொடுத்துள்ளான் என்பதைப் புலப்படுத்துகின்றது.

முதலாம் இராசராசன் காலத்தில் இக்குற்றாலத்தைத் தன்னகத்துக் கொண்டது உய்யக்கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாடாகும். உய்யக்கொண்டார் வளநாடு என்பது, காவிரிக்கும் அரிசிலாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும். திருவழுந்தூர் நாடு என்பது இக்குற்றாலத்திற்குத் தெற்கே சுமார் $2\frac{1}{2}$ மைல் தூரத்தில் உள்ள திருவழுந்தூரைத் தலைமையாகக் கொண்ட நாடாகும்.

---

*இக்கல்வெட்டின் சுருக்கக்கருத்து ஆதீனக்கோயில் (ஆதீன வெளியீடு) பக்கம் 164ல் குறிக்கப்பட்டுள்ளது.

மூன்று புருஷரத்னங்கள்

பிர்மஸ்ரீ. ய. மகாலிங்க சாஸதிரிகள், M. A., B. L.,
(தருமபுர ஆதீனக கல்லூரித் தலைவர்)

முன்கதைச் சுருக்கம்:

[கவிகளுக்குக் கல்பகவிருக்ஷமான ஸ்ரீ ஹர்ஷவிக்ர மாதித்தனை அனுசரிப் பலகாலம் காத்திருநதும் மாத்ரு குப்தன் என்ற கவிச்சிரேஷ்டனுக்குப் பலன் ஒன்றும் கிடைக்கவில்லை. ஓர் பனிக்கால இரவன்று வறுமை யின் துக்கத்தினாலும் குளிரினாலும் தூக்கமில்லாமல் அரமனைவாயிலில ஒருமூலையில் பதுங்கிக்கிடந்த அவன், அரசன் படுக்கை அறையிலிருந்து ஒரு காவலாளனைக் கூப்பிடும் சப்தத்தைக்கேட்டுத் தானே அரசனிடம் விரைநது சென்றான். அரசன் கவியின் சமபாஷணையி லிருநது அவனுக்கு பூஸதிதிவேண்டுமென்று அபேக்ஷை இருப்பதாய்த் தெரிநது கொண்டு காச்மீர தேசத்திற்கு அவனை அரசனாக்கிவிடத் தீர்மானித்துக்கொண்டான். அப்படியே தூதர்களை அனுப்பி மாத்ருகுப்தனின் பட்டா பிஷேகத்தை நடத்தி வைத்தான்]

மாத்ருகுப்தன் ராஜபரமபரையில் வந்தவனைப் போல நெடுங்காலம், இராஜ்ய பாரத்தை வகித்துப் பழகினவனைப்போல காஷமீரத்தை வெகு நேர்த்தி யாகவும் திறமையுடனும சில வருடங்கள் ஆண்டு வந்தான்.

வெகு தாராளமான மனப்பான்மையுடன் அரசு உரிமை செலுத்திவந்ததால், மாத்ருகுப்தன் ஸபை யிலே வித்வான்கள் நிரம்பியிருந்தனர். பர்த்ருமேண்டர் என்ற கவி 'ஹயகரீவ வதம' என்ற தன் மஹா காவ் யத்தை அச்சபையில அரங்கேற்றினர். கவிசிரேஷ்ட னுன மாத்ருகுப்தன் அக்கவிதைச் சுவையை நன்று பருகி ஏராளமான ஸமமானங்கள் வழங்கினான். மேண்ட

ரின் காவியம் ரஸம்பொழிவதாய் இருப்ப தென்பதை உணர்த்த அவ்வேட்டுப்புத்தகம் கயிற்றினால் இறுக்கிக் கட்டப்படும்பொழுது அதன் கீழ் ஒரு தங்கத்தாம்பாளத்தை வைக்கச்செய்தான். இவ்விதம் சுவை அறிவை உணர்த்தியபின் வஸ்திராபரணங்கள் மயமான ஸம்மானம்கூட அதிகப்படி என்று மேண்டர் நினைத்தார்.

மாத்ருகுப்தர் காஷ்மீரத்திலே விஷ்ணு ஆலயம் கட்டுவித்தார். அநேக தான தருமங்களைச் செய்து சிறப்புற்றார். நான்கு வருடங்கள், ஒன்பது மாதம் ஒருநாள், இராஜ்யபாரம் வஹித்தார். பின்பு அவர் பட்டத்தைத் துறந்து காசிக்குச் சென்று துறவறம் பூண்டார். அச்சரித்திரத்தை நாம் தொடரும் முன் இடையில் இதில் தொடர்புள்ள மற்றொரு சரித்திரத்தை எடுத்துரைப்பது அவசியமாகின்றது.

காஷ்மீரத்தின் புராதன அரசவம்சத்தைச் சேர்ந்தவன் மேஹவாஹனின் புத்ரன் ச்ரேஷ்ட ஸேனன் என்பவன். அவனுக்கே ப்ரவரஸேனன் என்றும் துஞ்சீனன் என்றும் பெயர்வழங்கப்பட்டது. சிரேஷ்ட ஸேனனின் புத்திரர்கள் ஹிரண்யன், தோரமாணன் என்ற இருவர்கள். அவர்களில் ஹிரண்யன் இராஜ்யமாளும்பொழுது இளவரசனான தோரமாணன் தன்பெயரால் நாணயங்கள் அச்சடித்து வழங்கினான். இந்தக் குற்றத்திற்காக ஹிரண்யுன் இளையவனைக் காராக்ருஹத்தில் அடைத்தான்.

தோரமாணன் வெகுகாலம் சிறைவாசத்தை அனுபவித்தான். இக்ஷுவாகு வம்சத்தில் வந்த வஜ்ரேந்திரன் என்ற அரசனின் புதல்வி அஞ்சனாதேவி, தோரமாணனின் பத்தினியாவாள். அவ்வுத்தமி சிறையில் அடைபட்ட தன் பர்த்தாவுக்குப் பணிவிடை செய்யும் உரிமை பெற்றிருந்தாள். காலக்ரமத்தில்

அவள் கர்ப்பிணியானாள். தோரமாணன் தன் அவமானத்தை மறந்து வாழ்க்கை இன்பத்தில் ஈடுபட்டதற்கு வெட்கமுற்றான். அஞ்சனையை வெளியே சென்று பிரஸவ காலம் வரையில் பகிரங்கமாகாமல் எங்கேயாவது மறைந்து வாழ்ந்து வருமபடி அனுப்பிவிட்டான். அஞ்சனை ஒரு குயவன் வீட்டில் வசித்து வந்தாள். அங்கு ஒருபுத்திரனைப் பெற்றாள். அவனுககுப் 'ப்ரவரஸேனன' என்று நாமகரணம் செய்வித்தாள். குழந்தையும் அங்கு வளர்ந்து வந்தது. அக்குயவன் வசித்த கிராமத்திலுள்ள மற்றச் சிறுவர்களெல்லாம ப்ரவரஸேனனைத் தலைவனாக அங்கீகரித்து விளையாடினார்கள்.

ப்ரவரஸேனன் அரசனின் நடவடிககைகளைப் போலவே பால்யலீலைகள் புரிந்தான். படையெடுப்பு, விஜயம், நிகரஹம், அனுகரஹம், நன்கொடை அளித்தல் முதலிய காரியங்களை அபினயித்தான். இவனுடைய பெருந்தன்மையான செயல்கள் பார்ப்பவர்கட்கு ஆச்சரியத்தை விளைவித்தன. இககுழந்தையின் கீர்த்தியும பரவியது. அயோத்தியாதிபதியான ப்ரவரஸேனனின் மாதுலன், ஜயேந்திரன இந்த ஆச்சரியத்தைக் கேள்வியுற்று, ஜயங்கொண்டு விவரமறிய நேரில் வந்தான். ஜயேந்திரன், சூரனும் தேஜஸ்வியுமான அச்சிறுவனைப்பார்த்துத் தன் மருமகனே என்று ஸந்தேகித்தான். மேலும் அவன் விருத்தாந்தங்களைத் தேடலானான். தன் தங்கையின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து, அவளைச் சந்தித்தான். அந்நிலையில் சந்தித்த இருவரும் கண்ணீர் உகுத்தனர்; வெகுநேரம் நெஞ்சடைத்துத் துககித்தனர். ஜயேந்திரன் தன் மருமகனை அணைத்து முத்தமிட்டுககொண்டான். தங்கைககுத் தேறுதல் கூறிவிட்டு மேல் நடககவேண்டியவைகளுககு ஏற்பாடுசெய்யத் தனது இராஜ்யத்திற்குச சென்றான்.

வெகுசீக்கிரத்தில் தூதர்களை அனுப்பித் தங்கை யையும் மருமகளையும் தன்னிடம் வரவழைத்துக் கொண்டான். ப்ரவரஸேனன் அரச குமாரர்களுக்கு உரிய கலைகளைக் கற்றுவந்தான். அவன் வளர வளரத் தன் தந்தையைச் சிறையிலிருந்து மீட்பது தன் கடமை என்று உணர்ந்தான்; வீரச்செயல்கள்புரியத் துடி துடித்துக்கொண்டிருந்தான். ஜயேந்திரனும் அவனுக்கு உதவிபுரிய உரியகாலத்தை எதிர்பார்த்துக் கொண் டிருந்தான்.

இப்படி யிருக்கும்சமயத்தில் ஹிரண்யன் யதேச்சை யாகத் தன் தம்பியை விடுதலைசெய்தான். ஆனால் துரதிருஷ்டவசத்தால தோரமாணன் விடுவிக்கப் பட்ட தும் தேக அசௌகரியமடைநது ஸ்வல்ப காலத்திற்குள் மரித்துவிட்டான். இந்தச் செய்திகேட்டு அஞ்சனுதேவி தன் உயிரைமாய்த்துக்கொள்ள முற்பட்டாள். அவளைப் ப்ரவஸேனனும் ஜயேந்திரனும் தடுத்துச் சமாதானம் செய்தார்கள். ப்ரவரஸேனன் தன் துக்கத்தை மறக்கும்பொருட்டுத் தீர்த்த யாத்திரைக்குப் புறப் பட்டான்.

இதன் மத்தியில் ஹிரயண்யனும் காலமானுன். அவனுக்கு வார்சு இல்லை. ப்ரவரஸேனனைப் பற்றி அறியாத காஷ்மீரப் பிரஜைகள், ஹர்ஷ விக்ர மாதித்யன் அனுப்பிய மாத்ருகுப்தனை அரசனுக ஒத்துக்கொண்டனர். ப்ரவரஸேனன் தீர்த்த யாத் திரையினல் பித்ருக்களைத் திருப்திசெய்துவிட்டு அயோத் திக்குத் திரும்பிவந்ததும விக்ரமாதித்யன், தனது முன்னோர்களது இராஜ்யத்தை யாருக்கோ, வழியில் போகிறவனுக்குக் கொடுத்துவிட்டான் என்று செய்தி கேட்டுச் சினம்கொண்டான. மாதருகுப்தனைச் சிக்ஷிக்க அவன் அக்கரைகொள்ளவில்லை. ஆனுல் விக்ரமாதித் யனிடம் அவன் வைரம் மேற்கொண்டான். தன்

மாமனது உதவியினுல் பெரிய சைன்யத்தைத் திரட்டினுன். உஜ்ஜயினிமீது படையெடுககச் சித்தமானுன்.

உஜ்ஜயினியை நோககித் தெற்கே ப்ரவரஸேனன் வந்துகொண்டிருககும்போது, விகரமாதித்யன் காலகதி அடைந்துவிட்டதைக கேள்வியுற்ருன்; மிகுந்த ஏமாற்ற மடைந்தான். மேலே யாதுசெய்வதெனறு தோன்ருமல் திருமபினுன். அரசனில்லாத நாட்டைக கைப்பற்றுவது ஆண்மையில்லை என்று நினைத்தான் போலும்!

ப்ரவரஸேனன் மீண்டும சைன்யங்களுடன் காஷ்மீரத்திற்குச் செல்வதாக, ஆலோசிததுக கொண்டு திரும்பும்பொழுது, வழியில் ஆச்சரியமான செய்தியைக் கேட்டு வியப்படைந்தான். காஷ்மீர தேசாதிபதியான மாத்ருகுப்தன் இராஜ்யத்தைத் துறந்து, காசிககுச் செல்லும உத்தேசத்துடன் அவ்வழியே வந்துகொண்டிருந்ததுதான் அச்செய்தி. எனவே ப்ரவரஸேனன மாத்ருகுப்தனை வழியில் சந்திகக விருப்பங்கொண்டான். மாத்ருகுப்தன், தன் பிரயாணத்தின் மத்தியில் ஒரு தங்கும இடத்தை ஆச்ரயித்திருககுமபொழுது, ப்ரவரஸேனன் ஸ்வல்ப பரிவாரஙகளுடன் செனறு, வினயத்துடன் மாத்ருகுப்தனை வணங்கிவிட்டுப் பின்வருமாறு உரையாடலானுன்:—

"ஸ்வாமி! தாங்கள் ஏன் இராஜ்யத்தைத் துறந்துவிட்டீர்கள? விரோதிகள் வலுததுவிட்டனரா? உள்நாட்டுக கலகங்கள் விளைந்தனவா? அரண்மனையில் சதியா? ஏன் திடீரென்று காஷ்மீரத்தை விட்டுக கால்நடையாய், ஏகாங்கியாய் இப்படிப் புறப்பட்டுக காடு வந்து சேர்ந்தீர்கள்?"

மாத்ருகுப்தன் பெருமூச்சுவிட்டு சோகப்புன்னகை புரிந்து தன் வரலாற்றைச் சொலலத் தொடங்கினுன்-

"ராஜகுமாரா! விகரமாத்தியன் காலகதி அடைந்ததும் நானும் ராஜ்யத்தைத் துறந்துவிட்டேன். அவர் அளித்த அந்நாட்டை அவருக்குப் பின் ஆண்டு அனுபவிகக எனககு மனமில்லை. சூரியன் மறைந்தபின் சூரியகாந்திக் கல் எரியுமா? எனககு வாழ்விலே வெறுப்புத் தோன்றி விட்டது. பிராமணனுககு யோகயமான ஸந்யாஸ ஆச்ர மத்தை அடைந்து காசியில வாசம்செய்யும எண்ணத் துடன், நாட்டை மந்திரிகளிடம ஒப்புவித்துவிட்டுப் புறப்பட்டு விட்டேன. நீ அதறகு உரிய வார்சாக இருப் பது யாருக்கும்தெரியாது. உனனைச்சந்தித்ததில் எனககு மிகவும் சந்தோஷம. உன் பரம்பரை இராஜயத்தைப் போய் ஏற்றுககொள."

ப்ரவரஸேனன்மேலும்ஸந்தேகிததுச் சொல்கிறான்: "ஸ்வாமி! இதற்காக இராஜ்யபரித்யாகம தாங்கள்செய்ய வேண்டாம. விகரமாதித்யன் அளித்த காப்பை நான் தங்களுககு அளிககிறேன். அவர் இலலாததினுல் அதைரியப் படவேண்டாம; உங்களுககு அபகாரம் செய்ய நினைத்தவர்களை நான் தண்டிககிறேன். தாங்கள் இராஜ்யத்தை மறுபடியும் ஏற்றுககொள்ளவேண்டும்.'

இந்த வீரவார்த்தை கேட்டு மாத்ருகுப்தன் சிரித்துக் கொண்டான். 'ராஜகுமார! அநத ராஜ்யததில எனககு எதிரிகள் எவரும் கிடையாது. பிராமணனுககு உரிய "அலம்புத்தி" எனககு ஏற்பட்டது. விகரமாதித்யனை நான் கண்டு ஸேவை புரிந்தது அற்ப ஸனமானஙகளை வேண்டி. அவர் எனககு அளித்தது இராஜயம. குணஞு ஞன அவர் என்னை ராஜயாதிபத்யத்தில நியமித்தது கண்மூடித்தனமான கொடையலல. இராஜ்யத்தையும் நிர்வஹிககும திறமை எனககு உண்டு என்பதை அவர் அறிந்தே அதை எனககு அளித்தார். என்குலத்திற்கு ஒவ்வாத அப்பொறுப்பையும் அவருடைய தாக்ஷிண்யத்

திற்காக நான் ஏற்று நடத்திவந்தேன். அந்தப்பொறுப் புகளு முடிவு, அகக்கொடையாளியின் ஆயுளின் முடிவு தான். இனி அதை நான் திரும்பியும் பார்க்கமாட்டேன். ஸன்யாஸத்தில் புத்தியைச் செலுத்திவிட்டேன். காசிக குப் போய்க்கொண்டிருக்கிறேன். வழியில் உன்னைக் காண நேரிட்டது எனக்கு மஹத்தான சந்தோஷம். காஷ்மீரம் சென்று, ஸிம்மாஸனமேறி உன் பிரஜை களைக காப்பாற்று. உனக்குக கீர்த்தியும் ஆயுளும் விருத்தியாகட்டும்''.

ப்ரவரஸேனனுககு, மாத்ருகுப்தனின் பெருமையும் அவருடைய குணங்களைக் கண்டறிந்து வெகுமானித்த விகரமாதித்யனின் பெருமையும் வியககத் தககதாயிருந் தது. இளைஞனை ப்ரவரஸேனனுக்குப் பெரியோர் களுடைய அற்புதமான சரித்திரங்களைத் தானும் பின் பற்றவேண்டுமென்ற ஆசையுண்டாயிற்று. விகரமாதித் யனை முன்பு வெறுத்த அவன் இப்பொழுது அம் மஹா புருஷனின் உதாரமான சரித்திரங்களைக கேட்டுப் புளகாங்கிதமானன். அவனுககு மாத்ருகுப்தனின் கிரு தகஞதையுமவைராகயமும், வியப்பைத்தந்ததுமல்லாமல் கவிதையில் சூரனுக இருந்தும இராஜ்ய நிர்வாகத்தைத் திறமையுடன் சிலகாலம அவர் செலுத்திவந்தது அதி ஆசசரியத்தை உண்டுபண்ணியது. அவனஅப்பொழுது அப்பெரியோனிடம் தெரிவிததுக கொண்டதாவது -

"உங்களைப்போல உத்தமர்களைக காண்பதரிது; உங்கள் கீர்த்தி உலகெஙகும் பரவியுள்ளது. ஸாதுகக ளெல்லாம் உம குணங்களைப் புகழுகிறார்கள். கஷ்ட நிஷ்டூரங்களில் பரீக்ஷிககப்பட்டு, சீலத்தை மேன்மை யாகவே காப்பாற்றியவர். ஆகவே நீர் ராஜ்ய நிர்வா கத்தைக கைவிடககூடாது. எனககும குணவான் களிடம பக்ஷமிருப்பது வெளியாகட்டும. அந்த இராஜ் யத்தை நான் தங்களுககுக கொடுககின்றேன்''.

விகரமாதித்யனுடன் உதாரத்தன்மையில் போட்டி போட நினைகும் இளைஞனை ப்ரவரஸேனனின் வார்த்தையைகேட்ட மாதுருகுப்தன் புன்சிரிப்புப்பூண்டான். சற்று நிதானமாய் மனஉறுதியுடன் பின்வருமாறு பதில் கூறினன்:-

"ராஜகுமாரா! சில பழைய ஞாபகங்கள் நமமை வீணே குழப்புகினறன என்று தோன்றுகிறது நான் முன்பு விகரமாதித்யனிடம பூமிதானம் வாங்கும நிலைமையிலிருந்ததை நீ நினைத்துக் கொண்டிருககின்றாய். மேலும நீ அரசுரிமையைப் பெறுதநிலைமையில் இருந்து வருவதையும் மறந்து விட்டாய். உனக்குக கொடுககும் பெருமையும் எனககு வாங்கும் எளிமையும் இன்று மதி மயககத்தில்தான் இருககின்றன. அரசனக இருநது ஆண்டு நாட்டைத் துறந்த நான் அதை மறுபடியும் வேண்டுவேனு? எனககு இராஜயபோகத்தில ஆசையிருந்தால் என்கையிலிருந்ததை நான் விட்டிருப்பேனு? என்னை அரசனுக இருகக வேண்டாமென்று தடுத்தது யார்? யார்தான் தடுத்திருக்க முடியும்?

லோகோத்தரமான உதாரத் தன்மை பொருந்திய விகரமாதித்ய சகரவர்த்தியின் பெருமைகளை நன்றியுடன் ஸ்மரிக்கும் நான், அவர் வாழ்நாளுககுப் பிறகு எப்படிச் சுகபோகங்களை அனுபவிப்பது? ஆதலால் எனக்கு ஸன்யாசமே நேர்மை. அம்மஹாபுருஷனுககு நான் வேறு பிரதியுபகாரம் என்ன செய்ய முடியும்? அவர் கொடையாளி என்றால் நான் ஸத்பாத்ரம்என்பது இதனுல்தான் நிரூபணமாகவேண்டும. அவர் சரீரம் மறைந்ததை உத்தேசித்து நான் போகத்தைப் பரித்யாகம் செய்கின்றேன். இதையே அவர் விஷயத்தில் என கிருதகஞதையை நான் தெரிவித்துக்கொள்ளும் வழியாகக் கடைபிடித்திருககிறேன்"

இந்த உன்னதமான மனோபாவத்தைக் கேட்ட ப்ரவரஸேனன் ஆச்சரிய பரவசமானான். மாத்ரு குப் தரை எழுந்து தாழ்ந்து வணங்கினான். அவர்முன்பு பிரதிக்ஞை எடுத்துக்கொண்டான். "தாங்கள் எனக்குக் கொடுக்கும் இந்த இராஜயத்தின் வருமானங்களைத் தங்கள் ஜீவதசை பரியந்தம் நான் எடுத்துக்கொள்ள மாட்டேன். தங்களுககே அர்ப்பணம் செய்வேன்" என்றான்.

மாத்ருகுப்தன் பின்பு காசி சென்று காஷாயம் பூண்டான். முமுக்ஷுவாகக் காலம்கழித்தான். ப்ரவர ஸேனன் காஷ்மீர இராஜ்யத்தை அடைந்து ஆண்டு வரலானான். ஆனால் ஒவ்வொரு வருடத்து வரவு செலவு கிளையும மாத்ருகுப்தனிடம ஒப்படைத்து ஆதாயத்தை யும் அவருககே அர்ப்பணித்து வந்தான். பிக்ஷை மூலம விருத்தி நடத்திவந்த மாத்ருகுப்தர் அந்த தனத தை யெல்லாம் ஏழைகளுககு அளித்து வந்தார். இம் மாதிரி பத்து வருடங்கள நடந்தது. அதன்பின மாத்ரு குப்தர் மோக்ஷகதி அடைந்தார், ப்ரவரஸேனன் பினனரே காஷ்மீரத்தின் அதிகமான வருவாய்களைத் தான் ஏற்றுககொண்டான்.

अन्योऽन्यं साभिमानाना मन्योऽन्यौचित्यशालिनाम् ।
त्रयाणामपि वृतान्त एव त्रिपथगापयः ॥

ஒருவர் பெருமையை ஒருவர் உணர்ந்து அபிமானித்து கௌரவித்து உசிதமாய் நடந்துகொண்ட இந்த மூன்று புருஷரத்னங்களின் சரித்திரம கங்கை, யமுனை, சரஸ்வதி என்ற மூன்று புண்ணிய நதிகளின் ஸங்கமமான திரிவேணியைப் போல ஜனங்களைப் புனிதமாககவல்லது.

சீகாழியில் ஆண்டுவிழா

(நகரவாசி)

விழா என்றாலே எல்லோருக்கும் மகிழ்ச்சி. அதிலும் ஆண்டுவிழா என்றால் அளவிலா மகிழ்ச்சிதானே. 25—2—51 ஞாயிறு அன்று காலையிலேயே காழி நகரில் ஒரு கவர்ச்சி மிளிர்ந்தது. கோபுரவாயில்களில தேவார வகுப்பு ஆண்டுவிழா என்று எழுதப்பெற்ற வளைவுத் தட்டிகள் தெருவிலே செல்வார்க்கு வரவேற்பளித்தன. மாலை 6 மணிக்கு திரு. S. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் தலைமையில கடவுள் வணக்கத்துடன் விழா தொடங்கப்பெற்றது. திரு முருகையா தேசிகரவர்கள் வந்திருந்தா ரனைவரையும வரவேற்றுப் பேசுகையில், கலைகளையும கலைகளில் தெய்வநெறி தவழுவதையும் விளக்குவது இவ்விழா; இதற்குப் பெருந் திரளாக வந்திருக்கும அனைவரையும தேவஸ்தானச்சார்பில வரவேற்கிறேன என மொழிந்தார் அடுத்ததாகத் தலைவர் முன்னுரையில வருங்கால உலகத்தை நன்முறையில் அமைக்கும சிற்பிகள் இளைஞர்களே; அவர்கள் தெய்வ பக்தியுடன வாழ்வார்களானால அமைதிபெற்று நாடுசெழிக்க நலம்பெற வாழ்வார்கள். மக்கள உள்ளத்தில் பக்தியைத் தோற்றுவிக்க தேவாரமுதலிய திருமுறைகள் உறுதுணை புரிவன; இத்தகைய வகுப்புகள் ஆலயங்கள்தோறும பெருக வேண்டும. பெருகினற்றான் நாத்திகம ஒழிந்து ஆத்திகம பரவி அமைதி நிலவும். இக்காலத்தில் மக்கள் அறிவிற் சிறந்துவிட்டோம என இறுமாக்கின்றனர்; ஆனால் உண்மையில தாழ்ந்தநிலையை எய்தி வருகின்றனர். மேனாட்டாரெல்லாம விஞ்ஞானக் கலையை உணர்ந்துவரும இக்காலத்தில அதற்கப்பாலிருக்கும் மெய்ஞ்ஞானக் கலையைக் கண்டு நனிநாகரிக மெய்தி விளங்கினர். உருவவழிபாட்டின் உயர்வினை உள்ளவாறு உணர்ந்தனர். உருவத் தயாரிப்பதெனின் பலநாள் உபவாசமிருந்து இறைவனருளாலே இறைவடிவம் வார்க்கத்தொடங்குவர். இவ்வாறு கலை தெய்வமாகவும், தெய்வத்தினவழி கலைவாழ்வும விளங்கியது. இவ்வாறு உயர்ந்து விளங்கிய கலைகள் தென்னாட்டுக் கோவில்

களில் சிறந்து விளங்குகின்றன. தற்போது அவை யெல்லாம் அழியத் தொடங்குகின்றன. தமிழ் மக்கள் விழித்தெழுந்து பாதுகாக்க முற்படுவார்களாக என எழில்மிக்க பேச்சினை இசைத்தனர்.

பின்னர் நெல்லை மந்திரமூர்த்தி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். நவநீதகிருட்டினனவர்கள் திருமுறையும் மக்கள் வாழ்வும் என்பதுபற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். அவர்கள் பேசுகையில் எந்நாட்டவர்க்கும் இறைவன் தென்னாட்டிலே சிவனாக வும், நடராசனாகவும் விளங்குகிறான். மக்கட்கும் கலைக் கும் ஆதிகாலந்தொட்டே தொடர்புஉண்டு. தொடர்பை நடராசவடிவம் ஒன்றே நமக்குத் தெள்ளிதின் புலப் படுத்திவிடும். தில்லை நடராசர் உருவத்தை நெல்லைக்கு அருகே உள்ள கரிசூழ்ந்தமங்கலம் என்ற கிராமத்தில் உள்ளசிற்பி ஒருவன் அமைத்துக் கொடுத்தான். அப் பெருமை எம் பாண்டிநாட்டைச் சார்கின்றபோது என் உள்ளம் இன்பமார்ந்திருக்கிறது. ஆனால் அத்தகைய சிற்பியை முகலாய மன்னன், தமிழன் சிறப்புற்றமை யைப்பொறுமல் கைகளைக் களைந்து விடும்படியாகச் செய்தான் என்பதையறியத் துன்பம் உண்டாகிறது. திருமுறை மக்கள்வாழ்வில் எல்லாத்துறைகளிலும் பயன் தந்து வந்திருக்கிறது. கலையுணர்ச்சி, பத்தியுணர்ச்சி, காதல், வீரம், உலகியல் முதலியன சில எடுத்துக்காட் டாகும். ஆனால் தற்காலமக்கள் திருமுறைக்கும் நமக்கும் என்ன தொடர்பு என எண்ணுகின்றனர். அவர்களது எண்ணத்தை மாற்றுதற்கு இதுபோன்ற வகுப்புக் களும், விழாக்களும் அளப்பிலவாய் ஒளிர வேண்டும் என வீரமுழக்கம் செய்து முடித்தார். தொடர்ந்து தேவார வகுப்பு மாணவர் இருவர், "தேவாரமும் திரு முறையும்" என்பதோர் உரையாடல் நிகழ்த்தினார்கள். மகாசந்நிதானமவர்கள் விழாவிற்கு எழுந்தருளி மாணவ மாணவியர்கட்குப் பரிசு அளித்து ஆசியருளினார்கள். அதன் சுருக்கம்:-

'இறைவனைப்பற்றிப் பேசுகின்ற நாட்களெல்லாம் சிறப்புடைய நாள். பேசாத நாட்கள் நம் வாழ்க்கைக்குச்

சிறப்புடையன அல்ல. இதனை அப்பரடிகள் "பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று செப்பினர். மக்கள் மன்னுலகத்து மன்னுதல் குறிக்கவேண்டும். அத்தகைய முயற்சியில் ஈடுபட்டோரே மக்களாவார்; எக்காலத்தும் நாட்டு மக்கள் உள்ளத்தில் இடம்பெறும் வாய்ப்பினையடைவர். நிலைபேற்றையடைய திருமுறை நமக்கு வழிகாட்டுகிறது. மறுமை இன்பத்தை மட்டுமல்ல; இம்மை, மறுமை, அம்மை மூன்றிடத்திலும் நன்மை மிகுகின்றது. 'இம்மையேதரும் சோறும் கூறையும்' 'அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே' 'வாதியா வினை இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வந்தடையாவே' இதுபோன்ற கருத்துச்செறிவுள்ள பாடல்கள் பல. திருமுறையினை நசசிவாழ்வார் நலம் பல பெறுகுவர். இதனைத் திருமுறைகளே வலியுறுத்துகிறது பிரமபுரத் தணணலைப் பணிவார்க்கு அளவில் இன்பம் வந்தடையும். 'அலைபுனல்சூழ் பிரமபுரத்தருமணியை அடிபணிந்தால் நிலையுடைய பெருஞ்செல்வம் நீடுலகில் பெறலாமே' இன்னோரன்ன கருத்துக்கட்டுரைகளில் நம்பிக்கையுடன் பூசைக்கொண்டு அரன் பொன்னடி போற்றி, நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவிற்றி நீதிவழியில நிற்பார்களாக. அரன் நாமம் எங்கும் சூழின், அமைதி எங்கும் நிலவி, எங்கும் என்றும் இன்பம் பெருகும். வருங்கால சிற்பிகளாகிய மாணவ மாணவிகள் தெய்வ பக்தியுடன் திறம்பெற்று, திருமுறை மணம் தெருவெல்லாம் வீடெலாம் சாரப் பெற்று நீடு வாழ்வார்களாக.'

முடிவில் தேவஸ்தானக் கட்டளைவிசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் அனைவர்க்கும் நன்றிகூற, கடவுள் வாழ்த்துடன் விழா இனிதே முடிவுற்றது.

இரவு 8 மணிக்கு ஸ்ரீ சுவாமி அம்மனுக்கு விசேட அருச்சனை தீபாராதனைகளும், ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகளுக்குச் சந்தனகாப்பு அலங்காரமும் பஞ்சமுக அர்ச்சனையும் சிறப்பாக நடைபெற்றன.

மிடி - வறுமை, நினை ஒழித்து - உன்னைத் தவிர்த்து, எவரே - வேறுயாவருளார்; ஒருவருமில்லை. 'தாரித்ரியதுக்கபயகாரிணிகா' என்பது முதனூல்.

வி - ரை:- இசையுடனே அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்தால் அச்சம், பலவகைத் துன்பங்கள், வறுமை ஆதிய நீங்கும் என்பர் பெரியோர்கள். 21

தானவக்குழு மடிதலாற் சகஞ்சுக முறவே
மானமில்பவ நரகுற வவுணர்கண் மகிழ்ந்து
நானிலந்தனிற் புரியினுங் கருணைநீ நண்ணித்
தானமுய்க்குதி சங்கிரா மந்தனிற் சாய்த்தே.

கு - ரை:- இதுமுதல் ஐந்து கவிகள் தேவி பகைவரிடமும் பரிவுமிக்குடையாள் என்னும் பொருள்பற்றிக் கூறுகின்றன. தானவர் குழு - அசுரர்களின் கூட்டங்கள், சகம் சுகம் உற - எல்லா உலகத்தினரும் சுகத்தையடையவேண்டும், மானம் இல் பவம் - அவர்கள் அளவில்லாத பாவங்களைச் செய்வதால், நரகு உற - நரகத்தையடையவேண்டும். அங்ஙனமிருக்க; அவுணர்கள் - அசுரர்கள், புரியினும் - நரகடைவதற்குக் காரணமான பாவங்களைச் செய்தாலும், நீ கருணை நண்ணி - நீ பாவிகளாகிய அவர்களிடமும் கருணைகொண்டு, சங்கிராமம் தனில் - போரில், சாய்த்து - அவர்களைக்கொன்று, தானம் உய்க்குதி - (வீரர்கள் அடையும்) சுவர்க்கத்தில் செலுத்துகின்றாய்.

வி - ரை:- தேவி அசுரர்களிடம் கருணைகொண்டு அவர்களைப் போரில் கொன்று, அவர்களுடைய பாவங்களைப்போக்கி அவர்களைச் சுவர்க்கத்தில் செலுத்துகின்றாள். நானிலம் - முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்னும் நால்வகையாகிய நிலங்களை உடைய பூமி. 'நாமநீர் வைப்பி னானில வரைப்பும்' என்பது சிதம்பர மும்மணிக்கோவை. செய். 2. முல்லை குறிஞ்சியாகிய நிலங்கள் முதுவேனிலில் தமநல்லியல்பிழந்து திரிபுறுப் பாலை என்னும் படிவங்கொள்ளுதலானும் அது குலதநிலையல்லவாமாதலானும் பாலையை ஒழித்தார். 22

அவுணர் தங்களைப் பார்வையா லடலைசெய் நீயவ்
வவுணர் தங்கண்மீ தத்திரம் பொழிதிற மகிதர்
அவுணரா ராயினு மேவினாற் புனிதர்க ளாகி
அவுணர் மேலுல கடைந்திடப் புரிவிளை யாட்டே.

கு-ரை:- பார்வையால் - பார்ப்பதனாலேயே, அடலை - சாம்பலாக, செய் நீ - செய்கின்ற திறமுடைய நீ, அத்திரம் பொழிதிறம் - அம்புகளைச் சொரிவது, அகிதர் ஆயினும் - தீய செயல்களைப் புரிபவராயிருந்தாலும், ஏவினால் - உன்னுடைய அம்புகள் படுவதனால், புனிதர்கள் ஆகி - பாவம் நீங்கப்பெற்றவர்களாய், மேல் உலகு அடைந்திட - மேலான சுவர்க்கம் முதலிய இன்ப உலகங்களை அடையும்பொருட்டு, புரி - செய்கின்ற, விளையாட்டு - திருவிளையாடலேயாகும்.

வி-ரை:- இச்செய்யுளில் அசுரர் என்னும் பொருளுடைய அவுணர் என்னும் சொல் நான்கடிகளிலும் வந்தமையால் இச்செய்யுள் சொற்பொருட்பின்வருநிலையணியாம். 23

தொக்க தானவர் நயனங்கள் முகிழ்த்தில சூலி
உக்கி ரஞ்செறி நினதுகட் கத்தொளி யோடும்
மிக்க சூலத்தின் சவியினால் வெண்ணில வணிந்த
துக்க சாந்திசெய் நினமுக நோக்கிய தொடர்பால்.

கு-ரை:- முகநோக்கிய தொடர்பால் நயனங்கள் முகிழ்த்தில எனக் கூட்டுக. சூலி - முத்தலை வேலையுடையவளே, உக்கிரம் செறி - குரூரம் பொருந்திய, கட்கத்து ஒளியோடு - வாளை வீசுவதனால் உண்டாகும் ஒளியுடன், சூலத்தின் சவியினால் - முத்தலைவேலின் நுனியிலிருந்துவரும் ஒளியினால், வெண்நிலவு - வெண்மையாகிய பிறைச்சந்திரனை, நோக்கிய தொடர்பால் - பார்த்ததனால் உண்டாகிய சம்பந்தத்தால், தொக்க - கூடியுள்ள, தானவர் நயனங்கள் - அசுரர்களுடைய கண்கள், முகிழ்த்தில - அவியவில்லை.

வி-ரை:- அசுரர்கள், அமுதமயமான குளிர்ந்த சந்திர கண்டத்தைத் தரித்திருப்பதும் பார்த்தவருடைய துக்கத்தைப் போக்கடிப்பதாயுள்ளதும் ஆகிய தேவியின்முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்ததனால், தேவியினுடைய உக்கிரமாகிய வாளொளியினாலும் சூலத்தின்ஒளியினாலும் அசுரர்களின் கண்கள் அவிய வில்லை என்பதாம். இதனால் தேவியின் சந்திரகண்டம் தரித்துள்ள முகமானது அசுரர்களின் கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்தது என்பது அறிதற்குரியது. 'துக்க சாந்திசெய் நின் முகம்' எனலால் தேவியின் முகம் அருளவழிதலை உடையது என்பதுபெற்றும். 24

கொடியர் தஞ்செயல் சாந்திசெய் திடுநின குணமும்
படியில் யாவர்க்குங் கணிக்கொணுப் படியில வுருவும்
நெடிய னேமுதற் றேவர்தம் வலிகவர் நீசர்
முடிய வேயடு வீரமு மொப்பில மொழியின்.

கு-ரை.- செயல் - குரூரச்செயல்களை, சாந்திசெய்திடும் - தணிக்கின்ற, நின - உன்னுடைய, படியில் - பூமியில், கணிக்க ஒணு - அளவிடமுடியாத, படி இல - உவமானமில்லாத, நெடியன் - திருமால், வலிகவர் நீசர் - பலங்களையபகரிக்கின்ற அசுரர்களை, முடிய ஏ அடு - அழியுமாறு கொல்லுகின்ற; மொழியின் ஒப்பு இல - சொல்லுமிடத்து உவமையில்லாதனவாம்.

வி-ரை - தேவியின் குணம் வடிவம் வீரம் ஆகியவைகள் உவமானம் சொல்லமுடியாதவைகளாம் என்பது கருத்து. 'கொடியர் தஞ்செயல் சாந்தி செய்திடு நினகுணமும்' என்றமையால் தீயவர்களின் கொடிய சக்தியை எதிர்த்து நின்று போராடுவோருக்குத் தேவியின் அருள் இன்றியமையாததாம் எனக் குறித்தபடியாம். 25

அம்மை யேயிவண் டுட்டரா மவுணர்கண் மீது
வெம்மைச் சாயக மேவியே யவர்வினை யறுத்துச்
செம்மை யாகுநின் றிருவருள் சேரல ரிடத்தும்
எம்மை யும்முள தென்பதை யெமக்குணர்த் தினையே.

கு-ரை:- இவண் - இவ்வுலகில், வெம்மை சாயகம் ஏவி - வெப்பமாகிய கொடிய பாணங்களைச் செலுத்தி, வினை - பாவங்களை, அறுத்து - ஒழித்து, செம்மை ஆக்கும் - தூய்மையுடையவர்களாகச் செய்யும், செரலர் - பகைவர்; அசுரர், எம்மையும் - (தேவர்களாகிய) எங்களிடத்தும், உளது - ஒப்பாகவுள்ளது.

வி-ரை:- தேவி தனது வீரமனைத்தும் அசுரநாசத்திற்கே உபயோகப்படுத்தினாலும் அவள் அசுரர்களிடத்தும் தேவர்களிடத்தும் ஒப்பக் கருணையுடையவள் என்பதனை உணர்த்திய வாறு காண்க. 26

நினது வீரத்திற் கொப்பிலை பயங்கர நீக்கு
நினது மங்கள ரூபமு நிகருறு தெளியர்
தனை யளிப்பதற் கேசித்தந் தன்னிடை யளியாய
நினைவி லொன்னலர்க் கர்க்கசப் போரினீக் கிடுவாய்.

கு-ரை:- வீரத்திற்கு - (அசுர நாசகாரியமாகிய) பராக்கிரமத்திற்கு, ஒப்பு இலை - உவமானமான வீரமும் இல்லை, மங்கள ரூபமும் - மனோகரமாகிய மோகன வடிவமும், நிகர் உறுது - மற்றொரு மோகன வடிவத்தை உவமையாகப் பொருந்தாது, எளியர் தனை - ஏழைகளை, அளிப்பதற்கு - காப்பாற்றுவதன் பொருட்டு, சித்தம் தன் இடை - மனதினிடத்தில், அளியாய் - கருணையுடையவளே, நினைவு இல் - (ஒருபொழுதும்) நினைத்தலில்லாத, ஒன்னலர் - பகைவர்களை; அசுரர்களை, கர்க்கசம் - கடினம்; கடினமான மனதுடன், போரில் நீக்கிடுவாய் - யுத்தத்தில் கொல்லுபவளே.

வி-ரை:- வீரத்திற்கு - உக்கிரரூபத்திற்கு என்க. பகைவருக்குப் பயத்தையுண்டாக்கும் கோரரூபமும் எல்லாருடைய மனதையும் கவரும் மங்களரூபமும் ஒன்றாக அமையப்பெற்றுள்ளது நின்வடிவம்; ஆதலால் இவற்றிற்கு வேறொரு உருவமும் உவமையாகாது என்பது முன்னிரண்டடிகளின் கருத்து. அவ் இரண்டு உருவங்களுக்கும் ஏற்பத் தேவி ஏழைகளைக் காப்பாற்றும் பொருட்டு மனதில் கருணையும், பகைவர்களை அழிப்

பதன் பொருட்டு மனதில் கடுமையும் உடையவளென்பது பின் இரண்டடிகளின் கருத்து.

'நினது மங்கள ரூபமும நிகருறுது' என்பதனுடன், 'அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி'[1] என்பதனை ஒப்பு நோக்குக. 'நினைவி லொன்னலர்க் கர்க்கசப போரினீக்கிடுவாய்' என்னும ற்றடியைப படிக்குமபொழுது "தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின் ரேற்றமொரு, மாத்திரைப போது மனதில் வையாதவர் வண்மைகுலம, கோத்திரங் கல்வி குணங் குன்றிநாளுங் குடில்கடொறும, பாத்திரங்கொண்டு பலிக்குழலா நிற்பா பாரெங்குமே."[2] என்னும செய்யுள் ஞாபகத்திறகு வருகின்றது. 27

மூன்று லோகமுந் திதியடைந் தனமினுல் முதல்வி
யான்ற சூலத்தாற் காத்திடு வாயெமை யம்மே
சான்ற துககநோ யொழிந்தனஞ் சண்டியே கட்கம்
ஏன்று தீனரா மெங்களைப் புரத்தலெண் ணுதியே.

கு-ரை:- (நீ பகைவனைக் கொன்றதனல்) திதியடைநதன - காப்பாற்றப்பட்டன, ஆன்ற - மாண்புநிறைந்த, எமை - எங்களை, துக்கநோய் - அசுரரால ஏற்பட்ட மிகுந்த துன்பத்திலிருநது; ஒருபொருட பன்மொழி, சணடியே - கோபம உடையவளே, கடகம ஏன்று - வாளைக் கரததிலேநதிக்கொண்டு, தீனராம - எளியவராகிய, புரத்தல் - காப்பாற்றுவதற்கு, எணணுதி - எண்ணுவாய்.

வி-ரை:- நோய் எனற்கு அச்சம் எனப் பொருளுரைத்தலுமாம. சூலத்தால் காத்திடலாவது தமக்கு ஊறுசெய்யும் அசுரர்களைச் சூலத்தினுல் கொன்று தம்மைப் பாதுகாத்தலாம. இதனுல் தேவர்கள் தேவியை வணங்கித் தம்மைக் காக்குமாறு வேண்டுதல தெரிவிக்கப்பட்டது. இதுமுதல் மூன்று செய்யுட்கள் கவச மந்திரங்களாம. இவற்றை இடைவிடாது சொல்வோர்

[1,2] அபிராமி அந்தாதி. பா. 71, 67.

சகல பயங்களிலும் துன்பங்களிலுமிருந்து காப்பாற்றப்படுவார்கள். அவர்களுக்கு யாதொரு துன்பமும் அணுகாது. 28

கண்டை நாதத்திற் புரந்தரு ளடியரைக் கவின்விற்
கொண்ட நாணொலி சூலத்தி னெழிலுறுங் கொட்பா
லெண்டி சைக்கணுஞ் சந்தத மளித்தரு ளெம்மைத்
தொண்டு கொண்டநின் சௌமியம் பாலிக்கதுணையாய்.

கு - ரை:- கண்டைநாதம் - மணியின் ஓசை, அடியரை - நின் அடியவராகிய எங்களை, புரந்து - காப்பாற்றி, நாண் ஒலி - நாண்கயிற்றின் ஒலி; குணத்தொனி, சூலத்தின் எழில் உறும் கொட்பு - சூலத்தைச் சுழற்றுவதால் உண்டாகும் அழகு பொருந்திய சுழற்சி, சந்ததம் - எப்பொழுதும், அளித்து - காப்பாற்றி, தொண்டு - அடிமை; சௌமியம் - சாந்தசொரூபம், துணையாய் பாலிக்க - எங்களுக்குத் துணையாயிருந்து காப்பாற்றுக.

வி - ரை:- தேவர்களுக்கு ஊறுசெய்ய வரும் அசுரர்கள் தேவியின் மணியோசை கேட்டாலும் வில்லின் குணத்தொனியைக் கேட்டாலும் சூலத்தைச் சுழற்றுவதைக் கண்டாலும் தேவர்களுக்கு இடையூறு செய்தலைவிட்டு அஞ்சியகன்றோடுவராதலின் இம் மூன்றாலும் தங்களைக் காக்கவேண்டுமென்று தேவர்கள் தேவியை வரம்வேண்டினரென்க. சௌமியமென்பது தேவியின் மங்களவுருவமாம். அது படைத்தல் காத்தலுக்கு உரியது. பாலித்தலாவது இவ்வுருவத்தால் தமக்கு வேண்டிய நன்மைகளை யுண்டாக்கிக் கொடுத்துக் காப்பாற்றுதலாம். எண்டிசை - பெருந்திசை நான்கு கோணத்திசை நான்கு ஆக எட்டுத்திசையாம். இச்செய்யுள் திசைக்கட்டு மந்திரப் பாடலாம் என்பர் பெரியோர்கள். 29

கோர மாவுருப் பாலிக்க கோப்புவி கட்கம்
சீர முத்தலை வேல்கதை சரமெமைத் திதிக்க
யாரு நேரிலாந் துர்க்கையே பகவதி யம்மே
யீர நின்கம லப்பத மிறைஞ்சியேத் தினமால்.

கு-ரை·- மா கோரம உரு - பெரிய உக்கிரசொரூபத்தினுல், கோ - விண்ணுலகத்தையும, புவி - பூலோகத்தையும்; (தேவர்களையும் மனிதர்களையும), பாலிக்க - காப்பாற்றுக, சீர - சிறப்புடைய, கதை - தண்டு, சரம் - பாணம்; (ஆகியவற்றால்), எமை திதிக்க - எப்பொழுதும எவவிடத்தும எங்களைக் காப்பாற்றுக, யாரும் - எவவிதமான சிறந்த தகுதியையுடையவர்களும, நேர இலா - ஒப்பாதல் இல்லாத, துர்க்கையே - "துர்க்கமன்" என்னும அசுரனைக் கொன்றவளே; "துர்க்கமன் னெனு மவுணனை அழித்தலாற் றுர்க்கை" (11 அத் 31 செய்), பகவதி - பகவானுடைய சக்தியாயிருப்பவளே, ஈரம் - குளிர்ச்சி, இறைஞ்சி - வணங்கி, ஏத்தினம - துதித்தோம, ஆல் - அசை.

வி-ரை·- கோரமாவுருப் பாலித்தலாவது கோரரூபம் அழித்தலாகிய தொழிலைச செய்வது. இது காளியின் வடிவம. இதனுல் தமது பகைவராகிய அசுரர்களின் தீய சக்திகளைக் கெடுத்துத் தமமைப் பாதுகாக்குமாறு வேண்டியபடியாம். 29ஆம கவியிறகூறிய சௌமியவடிவத்தாலும இக்கவியிற் கூறிய கோரவடிவத்தினுலும விண்ணிலுள்ள தங்களையும பூமியிலுள்ள மனிதர்களையும காபபாற்றுமாறு தேவர்கள் தேவியை வேண்டியதுடன் சூலம முதலிய ஆயுதங்களாலும தமமைக்காக்குமாறு வரம வேணடினரென்க. ஒருசமயம கரியவுருப்பெற்றுக காளியாயிருந்த தேவியானவள் பொனனிறவுருவமபெற்றுத் துர்க்கையாயினுள் என்பது வாயுசங்கிதை "உரைத்தலுங் கரியவவ் வுருவ நீங்கியே, தரித்தனள் பொன்னுரு" "விட்டவக் காருரு மிக்க பேர்வலி யெட்டுடைக் கரங்களொ டியைந்து துர்க்கையா, யடடுயி ருண்டிடத் தோன்றி" தேவிதவமான்மியமுரைத்தவத்தியாயம (29, 30 செயயுள்) தாக்கை - கிட்டமுடியாதவள் எனவுரைததலுமாம். 30

எனம ருதுதுவன் முதலினே ரித்துதி செய்து
மனவி ருப்பொடு நநதன மலர்கொண்டுங் கந்த
நனிவி ளங்கிய லேபனந தூபத்தா னங்கை
முனமி ருந்தன்பி னர்ச்சித்து மொழிந்தனர் துதியே.

கு - ரை:- என - என்று, மருத்துவன் முதலினோர் - இந்திரன் முதலாகிய தேவர்கள், இ துதி செய்து - இந்த மேலான தோத்திரங்களைச்சொல்லி, நந்தனமலர் - தேவ வுத்தியானத்தில் முளைத்த பூக்கள்; கொண்டு மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு; கருவிப்பொருளுணர்த்துவது, கந்தம் - ஏலம் தக்கோலம் இலவங்கம் சாதிக்காய் கருப்பூரம் என்னும் பஞ்ச வாசங்களாலும், லேபனம் - சந்தனமுதலான அநுலேபனத்தாலும்; (அபிடேகம்), தூபத்தால் - சாம்பிராணி முதலியவற்றாலாகிய வாசனைப் புகையினாலும், நங்கைமுனம் - தேவியின் முன்னிலையில், அருச்சித்து - பூசித்து, துதி மொழிந்தனர் - தோத்திரம் சொன்னார்கள்.

வி - ரை:- கந்தம் நனிவிளங்கிய லேபனம் என்பதற்குச், "சந்தன மகிலினோடு தகரம் குங்குமமே கோட்டம்" என்னும் ஐவகை விரைகளினால் மிகவும் மேலானதாக விளங்குகின்ற மேற்பூச்சுகளினாலும் எனவுரைத்தலுமாம். இச்செய்யுளில் தேவர்கள் தேவியை வழிபட்டு அவளருள்பெறும் முறைமை கூறியவாறுகாண்க. 31

அரம்பை மாதர்க ணடித்தனர் கானத்தை யறைந்தார்
பரம்ப ரன்றிருத் தேவியும் பத்தரை நோக்கிப்
பரந்த வன்பினுன் மகிழ்ந்தன மெவ்வரம் பகர்திர்
அரந்தை தீரயா மளிக்குது மென்றன ளன்றே.

கு - ரை:- அரம்பைமாதர் - அரம்பை முதலாகிய ஆடல் பாடலில் வல்ல தேவமாதர்கள், கானம் - இசைப்பாடல்கள், பரம்பரன் திருத்தேவி - பரமசிவனுடைய மனைவி; "சதாசிவ குடும்பினி" என்பது தேவியின் திருநாமங்களில் ஒன்று, பத்தரை - பக்தியையுடைய தேவர்களை, எ வரம் - நீங்கள் என்னிடம் பெறவிரும்புவது என்னவரம், பகர்திர் - அதனைக் கேளுங்கள், அரந்தைதீர - உங்களுடைய துன்பங்கள் நீங்கும் படியாக, யாம் அளிக்குதும் - நான் அவ்வரத்தைக் கொடுப்பேன்.

வி - ரை:- தேவி தேவர்களை நோக்கி நீங்கள் வேண்டிய வரத்தைக் கேளுங்கள் அதனைத் தருகின்றோமென்றனள். 32

உ-ம்: அப்பிண்டந்தான் ஒன்று பல குழீஇயதும் வேறு பல குழீஇயதும் ஆம். ஒன்று பலகுழீஇயது எள்குப்பை. எள்ளின் வேறுகுப்பை என்று உண்மை வகையின் இல்லையென்றவாறு. வேறு பல குழீஇயது படைக்குழாம். முதல் சினை எனவும், பொருள் பிண்டம் எனவும், இவை யாராய நின்றமையின் மற்றொன்று விரித்தல் என்னுங் குற்றமாம், பிறவெனின், அதற் கோர் அதிகாரப்பட்டு நின்றதாகலானும் பொருள் ஆராய்ச்சியும் இச் சொல்லாராய்ச்சிக்குப் பயன் படும் நிலைமைத்தாகலானும் அமையும் என்பது. (எ)

ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே. 93

என் - எனின், மூன்றும் வேற்றுமைப் பொருட் கண்ணதோர் சொல்லுதல் வகைமை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஒருவினை கொண்டு முடிதலுடைய ஒடு என்னும் சொல் அவ் விருவினையையுடைய இருபொரு ளினுமாய் அதன்பின் வருமோ எனின், அது கூறு வான் அப் பொருளின் அப்பொழுது உயர்ந்ததாகக் கருதியதன்பின் வரும் என்றவாறு.

உ-ம்: அரசரொடு வந்தார் சேவகர் என்பதைச் சேவகரொடு வந்தார் அரசர் என்னற்க.

இனி அவ்வுயர்புதாம் குலத்தான் உயர்தலும், தவத்தான் உயர்தலும், நிலைமையான் உயர்தலும், உபகாரத்தான் உயர்தலும் எனப் பலவகைய.

இழிந்தவழி ஒடுவைத்துச்சொல்லுவது அந்நேரத்து அவற்றுய தொழின்மைச் சிறப்புநோக்கி என உணர்க. அவை, நம்பி நாயொடுவந்தான் என்றாற் போல்வன. (அ)

மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி
நோக்கோ ரனைய என்மனார் புலவர். 94

என் - எனின், மூன்றாம் வேற்றுமையும், ஐந்தாம் வேற்றுமையும் ஏதுப்பொருண்மைக்கு ஒத்த கிழமைய என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மூன்றாவதனினும், ஐந்தாவதனினும் விளங்கச் சொல்லப்பட்ட ஆக்கப் பொருண்மையோடு கூடிய ஏது என்னும் பொருண்மை அவ்வுருபுகளால் அப்பொருள் விளங்குமிடத்து *அஃதில்லை, இரண்டும் ஒருதன்மைய என்றவாறு.

உ - ம்: வாணிகத்தான் ஆயினன், வாணிகத்தின் ஆயினன் என்பன.

கிளவி யென்றதற்குப் பெயராற் பொருளினை ஆக்கமொடு புணர்ந்ததென்று விசேடித்துக கூறினமையின் ஆக்கமலலா ஏது ஒத்தகிழமைத் தன்று என்பது போலும கருத்து. (கூ)

இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கமவ்
இரண்டன் மருங்கின் ஏதுவும் ஆகும். 95

என் - எனின், இரண்டாவது மூன்றாவதனோடும், ஐந்தாவதனோடும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: இரண்டாம வேற்றுமையிடத்து, பெற்றியான் நோககப்படுதலன்றி மனத்தான்நோக்கப்படும் நோககும என மூன்றாவதன்கண்ணும், ஐந்தாவதன் கண்ணும் ஒததகிழமைய வென்றோதிய ஏதுப்பொருள் படும் என்றவாறு.

---

* அஃதென்றது மூன்றாவதும் ஐந்தாவதுமாகிய உருபுவேறுபாட்டை,

உ - ம்: வானோக்கி வாழும் என்பது, வானைநோக்கி வாழும், வானைய பயன் நோக்கி வாழும், வானினுய பயன்நோக்கி வாழும எனவரும். ஏதுவுமாகும் என்ற உம்மையான் தன்பொருட்பாடே சிறந்தது.

இனி ஏதுவாம்வழிச் செயப்படுபொருள்படுதற்கு உரிய நோக்கி என்பதனை ஒழிய, வானை வாழும் என்றாற்போல நிற்க வேண்டும எனின், செயப்படு பொருள் ஒழிய, ஏதுப்பொருட் குறிப்போடு செயப்படு பொருளாய் நிற்கும் என்பது போலும கருத்து. (ம)

அதுஎன் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுஎன் உருபுகெடக் குகரம் வருமே. 96

என் - எனின், ஆறாவது நான்காவதனோடும் மயங்கு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அது என்னும் வாய்பாட்டையுடைய ஆறாம் வேற்றுமை, உயர்திணைத் தொகைவயிற்கண் தொக்க தொகையிடத்து அவ் அது என்னும் வாய்பாடு கெட நான்காவதாய் வரும என்றவாறு.

உ - ம்: நம்பி மகன், நம்பிக்கு மகன் என்பது இலக்கண மில்வழி மயங்கல். நம்பியது மகன் என்பது இன்மையினென்க.

இச்சூத்திரத்தானே இவ் வுருபோடொத்துத் தம் பொருள்பட நில்லாது பெயர்போல் ஆறாவது பால் தோன்றி நிற்கும என்பது பெற்றாம். இந் நயத்தானே வினைகுறிப்பு உரிமைப்படா நிற்கும் வழியுண்டேனும் கொள்க. (கக)

தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்
கடிநிலை இலவே பொருள்வயி னான. 97

என் - எனின், இரண்டாவதும் மூன்றாவதும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ....

வினையுடைய பெயர்க்கண் இரண்டாவதும், மூன்றாவதும நீகக்கும் நிலைமையில; பொருள்படுமிடத்து என்றவாறு.

உ - ம்' புலி கொல் யானை என்பது, ஒருகால் புலியைக் கொன்றயானை, புலியாற் கொல்லப்பட்டயானை எனவும சொல் தொழில் இரண்டிற்குஞ் சென்றுவருத லில் தடுமாறு தொழிற்பெயர் என்னப்பட்டது. புலி யால் என்புழி வினை யாதோ எனின், ஆண்டும் வினை தோன்ற என்பது. அஃதேல் புலி கருவியாக யானை தான் பிறிதொன்றனைக கொன்றது என்பது பொரு ளாமாறு எனின், 'செய்யப்படுபொருளைச் செய்தது போல' என்பதனுல சொல்லப்பட்ட என்பது பொருளாக நோகக அவ்வாறாகாது என்பது.

செயப்படு பொருட்கண் வினைதொகுமால் எனின், செய்குனறு, உறைபதி எனப் பிறபொருட்கண்ணுந் தொகும் என்பது. (கஉ)

ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப உணரு மோரே. 98

என் - எனின், மேலதற்கோர் புறனடை யுணர்த்து தல் நுதலிற்று.

இ - ள்: இறுதிப் பெயர் முன்னர்ப் பொருளறிய வருஞ் சொல்லான், இன்ன வேற்றுமை யென அறிக; அத்தொகைச் சொல்லது பொருளினை உணர்வார் என்றவாறு.

உ-ம்: புலி கொல் யானை ஓடுகின்றது, புலி கொல் யானைக் கோடு வந்தது என வரும்.

மெய்யறிபனுவல் என்றதனால் பொருள் இயைய வாராதனவும் உள; புலி கொல் யானை கிடந்தது என்றாற் போல்வன. ஆண்டுச் சொல்லுவான் குறிப்பினான் அறிக. (௧௩)

ஓம்படைக் கிளவிக் கையும் ஆனும்
தாம்பிரி விலவே தொகவரு காலை. 99

என் - எனின், இதுவும் இரண்டாவதும மூன்றாவதும் ஒத்தவுரிமைய தொகைககண் வரும் காலத்து என்றவாறு.

உ-ம்: புலிபோற்றிவா, வாழியையஎன்பன. இவை புலியைப் போற்றிவா எனவும், புலியால போற்றிவா எனவும் விரியும என்பது. புலி என்றது புலியான்வரும ஏதத்தினை. ஓம்படை யென்பது போறறுதல். ஈண்டும் இரண்டாவது செயப்படுபொருளோடு ஏதுப் பொருள படுகினறது போலும். தொகவருகாலை என்றதனால் இவ்வேற்றுமை மயககமெலலாம தொக குழியே மயங்கு மென்பது கொள்ளப்பட்டது. முனனே ஆனுருபினோடு இன்னுருபும் ஏதுப் பொருட்டாகும் என்றோதப் பட்டமையின், ஒன்றின முடித்தல என்பதனான் புலியிற் போற்றிவா என ஐந்தாவதும் கொள்க. (௧௪)

ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்
கேழும் ஆகும் உறைநிலத் தான. 100

என் - எனின், ஆறாவதனோடு ஏழாவதும் மயங்கு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஆறாவதனிடத்து வாழ்ச்சி யென்னும் உரிமைக்கு ஏழாவதும ஆகும். யாண்டோ எனின், ஆண்டு அஃதுறைநிலத்துககண் என்றவாறு.

உ - ம்: காட்டு யானை, காட்டது யானை, காட்டின் கண் யானை என விரியும்.

உறை நிலத்தான என்றதனுல் உறையா நிலமாயக் கால் ஆறாவதன்கண் வந்ததாகாது ஏழாவதுதானே யாம் என்றவாறு. அஃது ஊருள் யானையாய்க் காட்டுள் மேய விட்டதனைக காட்டு யானை யென்னும் வழிக கொள்க.

மற்று இஃது வாழசசியும் ஆறன் மருங்கின் வாழ்ச்சி யாயின வாறு என்னை? அஃது யானைககாடு என்பதன்றே; ஆண்டு யானையுட்காடு என ஆகாதால எனின்; யானை காட்டின்கண் வாழ்தலால் உடைமையாயிற்றன்றே. அதனுல காட்டியானை யென அககாட்டிற்கு யானையை உறுப்பாகக கூறுமவழி வாழதலடியாக நின்ற தாகலின், அதனையும வாழச்சிக கிழமை யென்று கூறியவாறு போலும். அதனுற் போலுமென்றது சிறு பான்மை என்றவாறு. (கரு)

குத்தொக வருஉங் கொடையெதிர் கிளவி
அப்பொருள் ஆறற் குரித்து மாகும். 101.

என் - எனின், நான்காவதன்பொருள் ஆறாவதன் கண் செல்லுமாறு உணர்த்துதல் றுதலிற்று.

இ - ள்: கு என்னும் வாய்பாடு தொக்கு வருகின்ற கொடைத் தொழிலினை யேற்றுக் கொண்டு நின்ற சொல் மயஙகுமாறுகூறின், அப்பொருண்மை, ஆறாவது உடைமைப் பொருளாதற்கு உரித்துமாம் என்றவாறு.

உ - ம்: நாகர்பலி என்பது நாகர்க்குப் பலி, நாகரது பலி என விரியும்.

கொடைக்கிளவி என்றது எதிர்கிளவி என்றத னுன் இவ்வாறு மயங்குவது எதிர்கிளவி அல்லாக்கால் மயங்காது என்பது. எதிர்தல் என்பது விழுப்பமுடை யாரை முதலியககாற் கொண்டு வைத்து விரும்பிக் கொடுப்பது. மற்றிது நிகழ்தலின்மையின நான்காவது ஆயவாறு என்னை யெனின், நிகழ்ந்தேயனறு கொடை நிகழ்கின்றது. நிகழவதும் பொருண்மை வகையாற் கொடையெனப்படும் என்பது. (கசு)

அச்சக் கிளவிக் கைந்தும் இரண்டும்
எச்சம் இலவே பொருள்வயி னை. 102.

என் - எனின், ஐந்தாவதும் இரண்டாவதும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அஞ்சுதல என்னும் பொருண்மைககு ஐந்தாவதும, இரண்டாவதும் தம்மில ஒத்த நிலைமை யவாம் பொருள்படுமிடத்து என்றவாறு,

உ - ம்; புலி அஞ்சும என்பது புலியை யஞ்சும் என விரியும. அவ்வச்சம கள்ளரின் அஞ்சும எனவும் வழககிற் பொருள்படு நிலைமையும உண்டு; ஈண்டு அது கொள்ளற்க.

ஓம்படை என்றதற்கண் கூறியவற்றுல் புலியான் அஞ்சும் என மூன்ருவதன் வரவும கொளக, (கஎ)

அன்ன பிறவும் தொன்னெறி பிழையாது
உருபினும் பொருளினும் மெய்தடு மாறி
இருவயின் நிலையும் வேற்றுமை எல்லாம்
திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே. 103

என் - எனின், வேற்றுமை மயக்கத்திற்கும் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் மேல் எடுத்தோதப்பட்ட அத்தன்மையன பிறவுமாகிய, பழையதாகிய நெறிமுறைமையினைப் பிழையாது, உருபானும் பொருளானும் தத்தம்வடிவுதடுமாறி, தனக்குரிய இடம் பிறிதின் இடமாகிய அவ்விரண்டிடத்தும் நிலைபெறுகின்ற வேற்றுமையுள் எல்லாம் அமையாவழுவென்று கழிக்கப்படுதலைத் தன்னிடத்து உடையவல்ல ஆராய்வார்க்கு என்றவாறு.

இதனாற் சொல்லியது வேற்றுமையோத்தின்கண் இன்ன பொருட்கு இன்னது உரித்தென எடுத்தோதப்பட்ட வேற்றுமைகள் அவ்வப்பொருட்கு, உரியவாறாய் நில்லாது பிறபொருட்கண்ணும் சென்று மயங்குத லுண்மைகண்டு இவை வழுவன்றோ என்று வினவிய மாணாக்கற்கு, அவை மேற்றொட்டுப்பிறபொருண்மேலும் வழக்கு முடிவினை ஆராய்ந்த முதனூலாசிரியர்களும் வழங்கி வருதலான் வேற்றுமைவழு என்று புறத்திட்டாரல்லர். அதனானே, யானும் அம்முடிபே நேர்ந்தேன் என்பது கூறியவாறு. இதுவும் மரபு வழுவமைதி.

அன்ன பிறவும் என்றதனால் கொண்டவற்றிற்கு உதாரணம். முறைக்குத்துக் குத்தினான் என்பதோர் தொகை, முறையாற் குத்தினான் என ஐந்தாவதும், ஏதுப் பொருட்கண் மயங்கி விரிந்தது. இனித்தொகையன்றி நின்று, கடலொடு காடு ஒட்டாது என்னும் வழக்கின்கண் கடலைக் காடு ஒட்டாது என இரண்டாவது மயங்கி வந்தது. இன்னுந் தொகையல்லாத தந்தையொடு சூளுற்றான் என்னும் வழக்கின்கண் தந்தையைச் சூளுற்றான் என இரண்டாவது மயங்கி வந்தது. பிறவும் அன்ன. (கஎ)

கம்பர் கவிதைக் கோவை

கம்பர் கவிரசத்தை அன்பர்கள் அறிந்து பருகுவதற்கு இந் நூல் ஒரு கருவியாகும். இது முதற்பகுதி. முதல் மூன்று காண்டங் களினின்றும் சிறந்த பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. தொகுத் தவர், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆசிரியர், திரு. அ. செ. சுந்தரராஜன் B. A, அவர்கள். ஒவ்வொரு படலத்திற்கும் முதலில் எளியநடையில் குறிப்பு, பொறுக்கிக்கொண்ட பாடல்களின் எண்கள் இவை தரப்பட்டுள்ளன. பாடல்களின் கீழ் குறிப்புரையும், சிலசில டங்களில் விளக்கவுரையும் கொடுக்கப்பட்டுள்ளன. ஓசை கெடாத கையில் பதங்களைக் கூடியவரை பிரித்திருந்தால் நலமாக இருக்கும். மார் 300 பக்கங்கள்கொண்ட இதன்விலை ரூ. 4. விலாசம்:- அ. செ. ந்தரராஜன் B. A., இராமநாதன் கல்லூரி, சுன்னாகம். (இலங்கை.)

ஆதீன தேவஸ்தானத்தில் சொற்பொழிவுகள்

திருக்குவளை தேவஸ்தானத்தில் நடைபெற்ற மாசிமகத் திருவிழா (சுந்தரர் நெல்மலை பெறும் விழா)வில் 21—2—51ல் திருவாரூர் போர்டு ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான், திரு. மு. இரத்தின தசிகாவர்கள் 'அருட்காழிப் பிள்ளையார்' என்பதுபற்றியும், 2—2—51ல் குத்தாலம் போர்டு ஹைஸ்கூல் தமிழாசிரியர் த்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார் அவர்கள் 'சுந்தரரும் அவர்தம் தேவாரமும்' என்பதுபற்றியும், வித்துவான், ஸ்ரீமதி. . கரும்படுசொல்லியம்மையார் அவர்கள் 'தொண்டர்சீர் பரவுவார்' ன்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர்கள். 14—2—51 அன்று வைத்தீஸ்வரன்கோயில் பிரசார சபா மண்டபத்தில் கார்த்திகைத் திருநாளை முன்னிட்டு, சீகாழி தேவஸ்தானம் கட்டளைவிசாரணை, த்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் செவ்வேள்' என்பதுபற்றியும், தருமபுர ஆதீனப் பாடசாலைத் தமிழாசிரியர், திரு. V. தருமலிங்கம் பிள்ளை அவர்கள் 'திருவாசகம்' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர்கள்.

ஆதீன தேவஸ்தானங்களில் உற்சவம்

வைதீஸ்வரன்கோயில், திருபுவனம், போளம் ஆகிய தேவஸ் தானங்களில் 14—3—51 முதல் 23—3—51 முடிய பங்குனி உத்திரத் திருவிழா நடைபெறும். அறிஞர்கள் பலர் ஆங்காங்கும் சொற்பொழிவாற்றுவார்கள். திருவையாறு தேவஸ்தானத்தில் திருநந்திபெருமான் திருக்கல்யாண மகோற்சவம் 16, 17—3—51 ஆகிய இருநாட்களிலும் நிகழும்.

ஆதீனப் பல்கலைக்கல்லூரியில்......

தருமபுர ஆதீனம் இயற்கைவளம்பொருந்தி ஒரு மாதிரிகிரா
மாக இருப்பதால், அடிக்கடி பல இடங்களிலிருந்து ஆரம்பப்பாடசா
முதல் கல்லூரிகள்வரையிலுள்ள மாணவர்களும், ஆசிரியர்க
தங்களுடைய சுற்றுப்பிரயாணத்தில் ஆதீனத்தையும் ஒன்றாகக்
வந்து பார்வையிட்டு, ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களையும் தரிசித்
செல்கிறார்கள், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களும் வருகிறவர்
தகுதி அறிந்து அவ்வவர்கட்கும் பயன்படக்கூடிய ஆதீன வெளிய
களை அளித்து அறிவுரையும் அருளிச்செய்வார்கள். அந்தமுறை
24—2—51ல் சென்னை, முத்தியாலுபேட்டை A. R. C. ஹைஸ்
(பெண்கள் உயர்நிலைப்பள்ளி) ஆசிரியஆசிரியைகள் பலர் வந்திருந்த
கள்.கல்விநிலையங்கள், நூல்நிலையம், மடாலயம், கோயில் முதலிய எல்ல
இடங்களையும் கண்டுகளித்தார்கள். மாலை மூன்றுமணிக்கு ஸ்ரீ-
மகாசந்நிதானத்தைத் தரிசித்தார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதான
அவர்களும் தமது ஆதீன வெளியீடுகளை அளித்து, அறிவு
வழங்கினார்கள்.

மாலை ஐந்துமணிமுதல் ஏழுமணிவரையில் ஆதீனப் பல்கலை
கல்லூரி குருஞானசம்பந்தர் கழகத்தின் சார்பில் ஒரு சிறப்புக்கூட்ட
ஏற்பாடுசெய்யப்பட்டது. இறைவணக்கத்துடன் கூட்டம் தொட
கிற்று. செயலாளர் முதற்கூட்ட அறிக்கையை வாசித்தார். மேற்ப
கலாசாலை தலைமை ஆசிரியை, திருமதி. மரகதவல்லியம்மை B.A., B.
அவர்கள் "நமது கடமை" என்பதுபற்றி அரியதோர் சொற்பொழி
ஆற்றினார்கள். செயலாளர், ரெ. ராமாநுஜம், (வித்துவான் இறுதிநி
மாணவர்) நன்றியுரை கூறக் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் நிறை
வெய்தியது. இத்தகைய சிறப்புக்கூட்டத்திற்குத் தலைமைவகித்தவர்க
ஆதீனக்கல்லூரித் துணைத்தலைவர், வித்துவான், திரு. ச. தண்டபாண
தேசிகர் அவர்கள். இவர்கள் அனைவரையும் இவ்விதழின் அட்டை
படத்தில் காணலாம்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at th
Gnanasambandam Press, Dharmapuram, (Mayavaram) 9—3—1951.